
நினைவோ ஒரு பறவை!
வாணி

## உள்ளே...

1. நினைவோ ஒரு பறவை! 5

2. இனி எல்லாம் சுபமே! 108

# நினைவோ ஒரு பறவை!

## 1

'**பூ**ங்குடில்.' மதுரை நகரை ஒட்டியிருந்த அழகிய கிராமம். குக்கிராமம் என்றும் சொல்ல முடியாமல், பெரிய நகரம் என்றும் கூற முடியாமல், ஓரளவு பெரிய கிராமம்.

'ஸ்ருதிலயா' - சி.டி.க்கள் விற்பனை செய்யப்படும் நிலையம்.

அங்கு கிடைக்காத சி.டி.க்களே இல்லை என்பது. அங்கு வாடிக்கையாக வந்து செல்லும் அனைவருக்கும் தெரியும்.

வந்த ஒன்றிரண்டு வாடிக்கையாளர்களை அனுப்பி விட்டு, சி.டி.க்களைத் துடைத்து அடுக்கிக் கொண்டிருந்த அவள் நிமிர்ந்தாள்.

நேராகத் தன்னிடம் வந்து நின்ற அந்த வாடிக்கை யாளரை நோக்கி அவள் புருவங்கள் தானாக உயர்ந்தன.

அவன் பதிலேதும் பேசாமல் இருக்கவே, "என்ன சார் வேண்டும்...?" என்று கேட்டாள்

"சி.டி..."

"அதற்கான கடைதானே சார் இது! என்ன சி.டி. வேண்டும்? திரைப்படமா?"

அவன் சொன்ன திரைப்படத்தின் பெயரைக் கேட்டதும், கடைப் பெண்ணிற்கு அடக்க மாட்டாமல் சிரிப்பு வந்தது.

"அதற்குள் எப்படி சார் அந்தப் படத்து..."

"இங்கு எல்லாப் படத்திற்கும் சி.டி. கிடைப்பதாகத் தீனா சொன்னானே! ஒரு வேளை என்னைத் திருட்டு சி.டி.யை மோப்பம் பிடிக்க வந்த போலீஸ் என்று நினைத்து விட்டாயோ...! அதுதான் வைத்துக் கொண்டே இல்லை யென்று..."

தீனா அக்கடையின் உரிமையாளர்.

"அதற்கில்லை சார்...! என்னதான் உங்க நண்பர் என்றாலும் இப்படிக் காலை வாரக் கூடாது இப்படி... ரிலீஸே இன்னமும் ஆகாத படத்திற்கு சி.டி.யைக் கேட்டு வருவது உங்களுக்கே கொஞ்சம் ஓவராகத் தெரிய வில்லையா சார்?"



நமட்டுச் சிரிப்புடன் அவள் விலக, இப்போது அசடு வழிந்து தலையைச் சொறிவது அவன் முறையாயிற்று.

அதற்குள்...

"என்னடா மாப்ளே... எப்போ சென்னையில் இருந்து வந்தே...?" என்றவாறே, அவன் முதுகில் செல்லமாக அடித்தவாறு உள்ளே நுழைந்தான், தீனா.

"இல்லை... இப்பத்தான்! நீ வரும்வரை இங்கே சும்மா பேசிக் கொண்டிருந்தேன்!"

"ஏன்டா... கடையில் வேலை செய்ய விடாமல் சும்மா பேசிக் கொண்டிருந்தாயா?"

"இல்லை மாப்ளே! சி.டி. வாங்கத்தான்..."

"இங்கே பாரும்மா... இவன் கேட்ட சி.டி.யை பேக் பண்ணி என் ரூமிற்கு அனுப்பு. அப்புறம்..." - இவன் பக்கம் திரும்பி...

"வா ஜெய்... நாம ரூமிற்குப் போகலாம்."

"என்ன சார்... சி.டி. அனுப்பிடவா...?" துடுக்காய்க் கேட்க, அவசரமாக மறுத்தான், ஜெய்.

"இல்லைடா... நான் கேட்டது இங்கே இப்போ இல்லையாம். வந்தா எடுத்து வைங்க."

நழுவுவதிலேயே அவன் குறியாக இருக்க... இவள் சிரித்துக் கொண்டாள்.

ஒரு அரை மணி நேரம் கழிந்திருக்கும். தீனாவால் ஜெய் என்று அழைக்கப்பட்ட அவன் நண்பன், தீனாவின் அறையிலிருந்து வந்தான்.

இவளைக் கடந்து போனவன், ஒரு நிமிஷம் நின்று விட்டு, பின் ரிவர்ஸில் இவளிடம் வந்து...

"அப்புறம்... உங்க பேர் என்னன்னு தெரிஞ்சுக் கலாமா?"

"கலாமே... தெரிஞ்சுக்கலாமே! என் பெயர்..."

அவள் கூறவும் இவன் முகம் மாறியது.

## 2

"என்னங்க நீங்க?"

"ஏங்க...?"

"இல்லை... இவ்வளவு அழகா இருக் கீங்க... பெயரும் அதற்கேற்றபடி அழகாக இருக்கும் என்று பார்த்தால், ஏதோ... கர்நாடகமா ஒரு பெயரைச் சொல்றீங்க!"

"நீங்க என் பெயரைத்தானே கேட்டீங்க? அதைத் தானே கூற முடியும்!"

"எனக்குப் பிடிக்கலை..."

"உங்களுக்கு ஏன் பிடிக்கணும்?"

அவளும் விடாமல் வம்புக்கிழுத்தாள்.

"ஏங்க... எந்த ஒன்னும் உபயோகப்படுத்தறவங் களுக்குத்தானே பிடிக்கணும்!"

"என்னது?"

"இல்லீங்க... கூப்பிடப் போற எனக்குப் பிடிக்கலை. உங்களுக்கு நானே ஒரு பெயரை வைக்கிறேன், பாருங்க...



உம்... ஸ்ருதிலயாவில் உங்களைச் சந்திச்சிருக்கேன். உம்... லயா... லயா... இனிமே உங்க பேரு லயாதான்!"

"என்ன வேண்டுமானாலும் கூப்பிட்டுக்குங்க... நான் திரும்ப மாட்டேன். ரோட்டுல போற யாராவது திரும்பிப் பார்த்துச் சண்டைக்கு வரப் போறாங்க!"

அவன் சென்று விட்ட பிறகும் அவள் காதருகில் 'லயா... லயா...' என்ற சொற்கள் ரீங்காரமிட்டுக் கொண் டிருந்தன.

ஆனாலும் அடுத்த முறை... அவன் - அதுதான் ஜெய் வந்து, "லயா மேடம்..." எனவும், அனிச்சையாய்த் திரும்பினாள்.

'இப்போ என்ன சொல்கிறாய்?' - என்றது ஜெய்யின் பார்வை.

ஜெய்யைப் பொறுத்தவரை அவள் லயாதான். முன்பை விடத் தன்னை யறியாமல் சிரத்தையாய் அலங்கரித்துக் கொண்டு வேலைக்குச் செல்ல ஆரம்பித் திருந்தாள்.

ஜெய்யின் சொந்த ஊர் மதுரைதான் என்றாலும், இவன் சித்தப்பா உதவியுடன் சென்னையிலும் கால் பதித்திருந்தான்.

மதுரையில் ஒரு சூப்பர் மார்க்கெட், சென்னையில் ஒரு சூப்பர் மார்க்கெட், ஒரு பழமுதிர் சோலை என்று நிர்வகித்துக் கொண்டிருந்தான்.

தீனாவின் கல்லூரித் தோழன்!

இவையனைத்துமே அவனே வந்து வலியச் சொன்ன தகவல்கள்.

லயாவும், தன்னைப் பற்றியும், தன் குடும்பத்தைப் பற்றியும் அவளையறியாமல் சொன்னாள்.

வயதான அம்மா, என்றோ காலமாகிவிட்ட அப்பா, தன்னை விட மூன்று வயது சின்னவனான தம்பி முகேஷ்... என்று மிகச் சிறிய குடும்பம் அவளுடையது.

தங்களைப் பற்றிய விபரங்களை ஏன் சொல்கிறோம் என்று யோசிக்காமலே இருவரும் பகிர்ந்து கொண்டனர்.

முதல் நாள் நெடுநேரம் பேசிய ஜெய் என்கிற ஜெய்கிஷோர், மறுநாள் வந்தால் பேச என, லயா அவளை யறியாமல் நிறைய விஷயங்களை ஒத்திகை பார்த்து வைத்திருந்தாள்.

ஆனால், மறுநாள்... அதற்கு மறுநாள் என...

ஒரு வாரம் ஓடியதேயன்றி ஜெய் வரவேயில்லை.

ஒரு சாதாரண கஸ்டமர் போல் அவன் நடந்து கொண்டிருக்கக் கூடாதா?

ஏன் தன்னிடம் வலிய வந்து, அவ்வளவு உரிமை யுடன் பேச வேண்டும்?

அவ்வளவு நட்புடன் பழகியவனா... ஏதும் சொல் லாமல் கொள்ளாமல் கடைப் பக்கமே வரவில்லை.

ஏதேதோ யோசனைகள் தோன்றி, லயாவின் மனதை வதைத்தன.



தப்பான சி.டிக்களை எடுத்துக் கொடுத்து, வாடிக் கையாளர்கள் முன்னால் அசடு வழிய நேர்ந்தது.

முதலாளி தீனாவிடமும் இது பற்றிக் கேட்கக் கூச்ச மாயிருந்தது. என்னவென்று கேட்க?

## 3

லயாவின் மன வருத்தத்தைப் போக்கி, மனதைத் திசை திருப்பும் வகையில் சந்தர்ப்பம் அமைந்தது.

ஆம்...! ஸ்ருதிலயா துவங்கிப் பத்தாண்டுகள் நிறைவு பெற்றதை அடுத்து, தீனா அதைப் பெரிய அளவில் கொண்டாட ஏற்பாடு செய்திருந்தான்.

அது... மனதிற்கு ஒரு புத்துணர்வை மற்றும் மகிழ்ச்சியைத் தருவதோடு, வியாபார நோக்கிலும் ஒரு பெரிய விளம்பரமாக அமையும் என்பது தீனாவின் கணிப்பு.

அதையொட்டி ஏராளமான நோட்டீஸ் வீடு வீடாகப் போய் விநியோகித்ததோடு, தள்ளுபடி விற்பனையும் அறிவித்திருந்தார்கள்.

இதையெல்லாம் செய்து விட்டு... கடை அழுது வடிந்து கொண்டிருப்பதா என்று, அங்கு பணிபுரியும் பணியாளர்கள் அனைவரிடமும் வெவ்வேறு வேலைகளை ஒப்படைத்துக் கடையை அழகுபடுத்தச் சொல்லியிருந்தான்.

கடை துவங்கிய தினமான ஜூலை ஒன்றாம் தேதியன்று சிறிய விழா போன்று ஏற்பாடு செய்திருந்தான்.

வந்தவர்களை உபசரித்து அமர வைத்துக் கொண்டிருந்தவள்... சற்றே தலையில் ஆங்காங்கே வெள்ளிக் கம்பிகள் போன்று நரை முடி ஓடினாலும், முகத்தில் கம்பீரம் குலையாது இளமையைக் காட்ட, சரிகை வேலைப்பாடுகள், உயர்ந்த தரத்தைச் சொல்லும் அதே சமயம்...

கம்பீரத்தைக் கொடுக்கக்கூடிய காட்டன் புடவையில் படுபாந்தமாய்த் தெரிந்த அந்த அம்மாளை உபசரித்து, குளிர் பானத்தை அவர் கைகளில் கொடுத்துவிட்டு நிமிர்ந்தவள், தன் கண்களைத் தானே நம்ப முடியாது நின்றாள்.

இவன்... ஜெய்... ஜெய்... உள்மனம் கூவத் துவங்கியது.

அவள் கண்கள் தாமாகத் தாமரை மலர்கள் போன்று மலர்ந்து விரிந்து அகன்றதை அவளாலேயே உணர முடிந்தது.

படபடவெனக் கண் இமைகள் கொட்டின.

"ஏன்...? எனக்குக் குளிர்பானமில்லையா...?" என்று கேட்டவாறு இவள் அருகில் வந்ததும், இவள் பேசத் திராணியற்றுச் சிலையானாள்.

"லயா...!" - மெல்ல... இவளுக்குப் பெயரிட்டவன் இவளை அழைத்து...

"லயா! பேச மாட்டாயா? இப்படிப் பேசா மடந்தையாயிருந்தால், பெண் என எண்ணாமல், சிலை என்று எண்ணிவிடப் போகிறார்கள்!" என்றவன், சிறிது இடைவெளிவிட்டு



"சிலை என்று எண்ணுவதோடு... தொட்டுப் பார்த்து விடவும் துணிந்து விடுவார்கள்!" என்றவாறு இவளைத் தொட வர...

"ஜெய்... இதென்ன விளையாட்டு? எனக்கு உங்க மேலே கோபம். சொல்லாமல் கொள்ளாமல் போயிட்டீங்கல்ல...!" என்று அவனுக்கு மட்டுமே கேட்குமாறு உரைத்தவள், அவள் அழைக்கப்படவும் வேறுபுறம் நழுவி நகர்ந்து விட்டாள்.

அவன் வந்திருக்கிறான் என்றதுமே... அதற்குப் பின்பு அடிக்கடி அவள் கண்கள், அவன் இருப்பிடம் தேடியலைந்து... அவன் இருப்பை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு திருப்திப்பட்டுக் கொண்டன.

ஆனால்... அவள் மனதை வேறு ஒரு கவலை அரிக்க ஆரம்பித்திருந்தது.

ஜெய் பக்கத்தில் அமர்ந்திருக்கும், அந்த வயதில் மூத்த கம்பீரப் பெண்மணி... ஜெய் ஜாடையோடு ஒத்துப் போகும் அவர்... ஒரு வேளை ஜெய்யின் அம்மாவோ!

களையும் கம்பீரமும் பணக்கார வம்சம் என்பதைச் சொல்லாமல் சொல்கிறதே!

அவளையறியாமல், தன் தோற்றத்தை ஒரு முறை பார்த்துக் கொண்டாள்.

பட்டுச் சேலைக்கு வழியில்லாது, பட்டுப் போன்ற தோற்றமளிக்கக் கூடிய பொய் ஜரிகை வேலைப்பாடு கொண்ட... சாதாரணக் கைத்தறிப் புடவை.

பாசி மணி ஏழ்மையைக் காட்டிவிடுமோ என்று தங்கம் போன்று ஒளிரக்கூடிய கவரிங் செயின்... என்று அலங்காரம் எல்லாவற்றிலும் எப்படியாவது ஏழ்மையை மறைத்துக் கம்பீரமாகக் காட்ட முயன்று ஓரளவு வெற்றி பெற்றிருந்தாள்... அவ்வளவே!

மற்றப்படி... ஸ்ருதிலயாவில் மாதம் இரண்டாயிரம் சம்பளம் வாங்கும் தன்னையும், கம்பீரமாக அம்மாவின் பக்கம் அமர்ந்து, பணக்காரத் தோரணை காட்டிய ஜெய்யையும் ஒப்பிட்டுக் கலங்கினாள், லயா.

## 4

அடுத்த இரண்டாம் நாள்...

பரபரவென இரண்டு, மூன்று வாடிக்கையாளர்களை ஒரே சமயம் கவனித்துக் கொண்டிருந்தவள்... "லயா..."

கிசுகிசுப்புக் குரல் தன்னருகே கேட்க, பரபரவென நிமிர்ந்தாள்.

இந்தப் பரபரப்பு... அந்த ஒரு குரல் அழைப்பில் தன் செல்லெங்கும் ஊடுருவுவதை ஏன் தன்னால் தவிர்க்க முடியவில்லை?

வேண்டுமென்றே... அதைக் கவனியாதவள் போல் வாடிக்கையாளரைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

கிளம்பிய வாடிக்கையாளரை நிறுத்தி வைத்து, புதுப்பட சி.டி.க்களையும், புது இசை ஆல்பங்களையும்



எடுத்துக் காண்பித்து நேரம் தாழ்த்திக் கொண்டிருக்கவும்... ஜெய்க்குப் பொறுமை மீறிப் போயிற்று.

விடுவிடுவென அங்கிருந்து கிளம்பியவன், தீனாவின் பக்கத்தில் போய் ஏதோ சொன்னான்.

கோடிக் கண்களால் கவனித்துக் கொண்டவள், புருவம் சுருக்கினாள்.

என்ன செய்யப் போகிறான்?

என்னவோ செய்து விட்டுப் போகட்டும்!

எவ்வளவு பெரிய இடத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிந்த பின்னர்... நான் ஏன் இனி இவரைப் பற்றி நினைக்க வேண்டும்?

ஆனால், ஜெய் நினைத்ததை முடிக்காமல் விட மாட்டான் எனப் புரிந்தது.

அடுத்த சில நிமிடங்களில், மற்றொரு பணிப் பெண்ணான ரோஷ்னா... இவள் சி.டி.க்களை எடுத்துக் காண்பித்துக் கொண்டிருந்த வாடிக்கையாளரிடம் வந்தாள்.

"சார்! இந்த சி.டி.க்களைத் தள்ளுபடி விற்பனையில் இப்போது தருகிறோம். ஒருபுறம் எண்டர்டெயின்மெண்ட்டோடு படிப்பிற்கும் உதவும். பார்க்கிறீர்களா சார்!

"அதோடு... இன்று வாங்கினால் மட்டுமே தள்ளுபடி விற்பனையில் கிடைக்கும்!" என்று நான்கைந்து சி.டி.க்களை நீட்ட...

அவள் பின்னே போய் விட்டார் அந்த வாடிக்கை யாளர்.

இவள் கண்கள் சிவந்தன. பேசுவதோ, பேசாதிருப்பதோ இவள் இஷ்டம்.

இவன் என்ன கட்டாயப்படுத்துவது?

"என்ன லயா! இனி ஒரு பத்து நிமிடங்களுக்கு வாடிக்கையாளர்கள் யாரும் வராத வண்ணம் ஏற்பாடு செய்தாயிற்று. இனி என்னுடன் பேசத் தடையில்லையே!"

"நான் எதற்கு உங்களுடன் பேச வேண்டும்?"

"ஏன்... ஏன் என்றால்... நேற்று விழுங்குவது போன்று பார்த்துக் கொண்டிருந்தாயே என் அம்மா... அவர்கள் உன்னைப் பற்றி என்ன சொன்னார்கள் என்று தெரிந்து கொள்ளவாவது பேசித்தானே ஆக வேண்டும்?"

ஆர்வமாய் அவன் கூற, ஊடலை மறந்தாள்.

"ஜெய்...!"

"சொல்லும்மா!"

"நீங்கள்... உங்கள் அம்மா... ரொம்பப் பெரிய இடம் என்பது பார்த்தாலே தெரிகிறது. வேண்டாம் ஜெய்!"

இதுவரை இல்லாத உரிமையாக, வார்த்தைக்கு வார்த்தை 'ஜெய்' வெளிப்படுவதைக் கவனித்தான்.

'என்னிடமா நடிக்கிறாய்?'

"என்ன வேண்டாம்?"

"எதுவுமே வேண்டாம். உங்கள் அம்மா என்ன சொன்னார்கள் என்றுகூடத் தெரிய வேண்டாம்."

"உன்னைப் பற்றித் தெரிய வேண்டாம். சரி... நம்மைப் பற்றிக் கூடவா?"



"நம்மைப் பற்றியா?"ஆச்சரியமாய் வினவினாள்.

"நம்மைப் பற்றி... என்ன..." - தெரியாத மாதிரிக் கேட்டாலும்... விடுவேனா?

"ஊம்... எல்லாவற்றையும் உடனே சொல்லி விடுவேனா என்ன...!"

"பின்ன... வேறு எதற்கு வம்புக்கு இழுக்கிறீர்கள்?"

"என் மேல் என்ன கோபம் என்று சொல்லு!"

"பின்ன... நன்றாகப் பேசிக் கொண்டிருந்தவர், திடுமென ஆள் அட்ரஸே காணோம். ஒரு தகவல்கூட இல்லை... கோபம் வராமல்..."

"என் லயாவிற்கு அதற்குத்தான் கோபமா? என்ன செய்வது...! எங்களுக்குச் சென்னையிலும் கிளைகள் உள்ளதல்லவா! அதை மாதமொரு முறையாவது போய்க் கவனித்துக் கொள்ள வேண்டாமா?"

'அட ஆமாம்! அது ஏன் தனக்குத் தோணாமற் போய்விட்டது?'

"அதோடு..."

"அதோடு...?"

"அதோடு... அப்படி உன்னிடம் சொல்லாமல், பேசாமல் போய்விட்டு, ஒரு வாரம் கழித்துப் பார்த்தால் அப்போதாவது உன் கண்களில் என் கேள்விக்கான விடை கிடைக்குமா என்று ஓர் ஆவல்!"

"என்ன... கிடைத்ததா?"

"பேஷா... அதுதான் என்னை விழுங்கி விடுபவள் போல் கண்களாலேயே உண்ணத் துவங்கி விட்டாயே! வேறு என்ன பதில் வேண்டும்?"

சட்டென வெட்கம் பிடுங்கித் தின்ன, தேவையில்லாது துப்பட்டாவைச் சரி செய்தவள், சட்டென நிமிர்ந்தாள்.

"உங்கள் அம்மாவிடம் எல்லாம் கூறிவிட்டீர்களா?"

"எல்லாம் என்றால்...!"

"எல்லாம்... நம்மைப் பற்றி ஏதும் சொல்லிவிட்டீர்களா என்ன...?"

"நம்மைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது, லயா!"

"ஒன்றுமே இல்லை யென்றா இவ்வளவு நேரம் பார்த்துப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?"

"ஐயோ...! நேரமாகி விட்டது... கிளம்பு என்கிறாயா?"

"மண்டு...! 'லயா - ஜெய்' - எவ்வளவு அழகாக இருக்கிறது என்கிறேன்."

ஒரு நிமிடம் நிதானித்து, "ஹுர்ரே..." - என்று மெல்லமாகக் கத்தியவன், "தேங்க்யூ லயா!" - என்றான்.

## 5

அடுத்து வந்த நாட்கள், வண்ண மயமாகவே கழிந்தன லயாவிற்கு.

சிறப்பானதொரு ஆண்டு விழா கொண்டாடினதை அடுத்து, 'ஸ்ருதிலயா'விலும் கூட்டம் அலைமோதியது.



பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பிற்கான மாதிரி வினா விடைகள் சி.டி. வடிவத்தில் வெளிவருவதை அறிந்ததுமே, அவற்றை நூற்றுக்கணக்கில் வாங்கி அடுக்கி விட்டான், தீனா.

அதை வாங்கப் பெற்றோர் கூட்டம் வேறு அலை மோதியது. மதுரையிலிருந்தும் வந்து வாங்கிச் சென்றனர்.

"எல்லாம் ஐயாவோட யோசனையாக்கும்... தெரியுமா?"

ஜெய் கூற... ஒரே மாதத்தில் கடையின் விற்பனையை இவ்வளவு தூரம் உயர்த்த முடியுமா? ஆச்சரியப்பட்டுப் போனாள், லயா.

அதுதான் இரண்டு பெரிய சூப்பர் மார்க்கெட்டுகளுக்குச் சொந்தக்காரனாக இருக்கிறான்!

அவளை யறியாமல் அவளுக்குள் புகுந்த ஏதோவொன்று அவளை ஜெய் கிஷோர் பக்கம் இழுத்துக் கொண்டே போவதை அறிந்தும், தடுக்க முடியாதவளாய்த் தவித்தாள், லயா.

"ஏதேது...! எப்போது சென்னை சென்றாலும் சொல்லாமல் கொள்ளாமல் செல்வதுதானே நம் பழக்கம்..." என்று கிண்டல் தொனிக்கக் கூறியவள்,

"இன்றைக்கு அதிசயமாகக் கூறிவிட்டுச் செல்ல வந்திருக்கிறீர்கள்..."

இன்று மதியம் சென்னை சென்றால், வர ஒரு வார காலமாகும் என்று கூற வந்த ஜெய்யிடம் வம்பளந்தாள், லயா.

அது காலை பதினொரு மணி என்பதால், கடையில் அந்தளவு கூட்டம் இல்லை.

"லயா... நேரடியாக விஷயத்திற்கு வருகிறேன். நீ கிண்டலாக, வம்பாக என்னுடன் பேசிக் கொண்டிருந்தாலும், நம் மனதில் இருப்பது எனக்கும் சரி, உனக்கும் சரி... தெரியாமலில்லை. ஏன் கண்ணாமூச்சி ஆட வேண்டும்? லயா... வெளிப்படையாகவே சொல்லும் தருணம் வந்து விட்டது. இதற்கு மேலும் சொல்லாதிருந்தால், என் இருதயம் வெடித்து விடும்..."

பீடிகையோடு ஜெய் சொல்லிக் கொண்டே போனாலும், தலை குனிந்தவாறு சி.டி.க்களை மெனக்கெட்டு அடுக்குவதைப் போன்று பாவனை செய்து கொண்டிருந்த லயாவிற்கு மனதெல்லாம் திக் திக்.

ஜெய் என்ன சொல்ல வருகிறார் என்று புரியாமல் இனியும் நடிக்க முடியாது.

அந்த வார்த்தைகளைக் கேட்கவே அவள் நெஞ்சம் ஏங்கியிருந்தாலும், புதிதாகத் தெரியாத ஒன்றைக் கேட்கப் போகும் ஆவலுடன் உற்று நோக்கினாள்.

"ஆமாம்மா... ஐ லவ் யூ! நீ வாய் திறந்து சொல்லா விட்டாலும், எனக்குத் தெரியும்... நீயும் என்னைக் காதலிக்கிறாய் என்று!"

ஜெய் மேற்கொண்டு ஏதோ பேசுமுன், ஏதோ ஒரு வாடிக்கையாளர் வந்து விட... அவர்களின் சம்பாஷணை தற்காலிகமாக நின்று போனது.

பிறிதொரு சமயமாக இருந்தால்...



ஒரு வாடிக்கையாளரைப் போல்... வந்தவரை அனுப்பிவிட்டு இவள் திரும்பும் வரை அங்கேயே நின்று கொண்டிருந்திருப்பான்.

இன்று உணர்ச்சி மேலிடப் பேசிக் கொண்டிருந்த விஷயத்தினால், அவனால் யாரோ வாடிக்கையாளரைப் போல நடித்துக் கொண்டிருக்க முடியவில்லை.

விருட்டெனச் சென்று விட்டான்.

அப்போது தீனாவும் அங்கே இல்லை என்பதால், யாருக்கும் எதுவும் புரிய வாய்ப்பிருக்கவில்லை.

லயாதான் வேலையில் கவனம் செலுத்த முடியாமல் தடுமாறினாள்.

எப்போதடா அந்த வாடிக்கையாளரை அனுப்பி வைப்போம் என்றிருந்தது.

எந்தத் தருணத்தை ஆவலோடு எதிர்பார்த்திருந்தாளோ, அதை எதிர்கொண்டபோது, செய்வதறியாது அத்தருணத்தைத் தவற விட்டு விட்டாளே!

## 6

அன்றைய தினம், வருத்தப்பட்டுக் கொண்டே அவளுக்குக் கழிந்தாலும், அடுத்த நாள் காலை எழுந்தது முதலே... என்னவோ சொல்லவொண்ணா மகிழ்ச்சி மனதிலே முகிழ்த்தது.

பிடித்த ஆகாய நீல நிற காட்டன் புடவையை அடியிலிருந்து தேடி எடுத்து உடுத்திக் கொண்டாள்.

கூந்தலைப் பின்னாமல், அதில் சின்னச் சின்ன மாறுதல்கள் செய்து கொண்டாள்.

சோம்பேறித்தனப்படாமல், கண்களுக்கு மை இட்டுக் கொண்டாள்.

காலை முதலே... உதடுகள் பிடித்த சினிமாப் பாடலை முணுமுணுத்தவாறே இருந்தன.

அம்மா கண்டுபிடித்துக் கேட்டபோது, மழுப்பலாக ஏதோ சொல்லி மறைத்து விட்டாள்.

'பொறும்மா... உனக்கு நல்ல செய்தி கூறும் நாள் வெகு தொலைவில் இல்லை! என் பாரத்தையும் உன் தலையில் மேலும் சுமத்தாமல், சமர்த்தாக, உன் மருமகனைத் தேர்வு செய்து விட்டேன்.'

மனதிற்குள்ளாக மட்டுமே பேசிக்கொள்ள முடிந்தது.

'என்ன... அதற்குள் சினிமா போல் கனவுலகத்திற்குச் சென்று விட்டாயா...? அதற்குள் மருமகனாமே... மருமகன்!'

'ஏன்... சொன்னால் என்ன? அதுதான் அவர் தன் மனதில் உள்ளதைக் கூறி விட்டாரே! என்ன... என் மனதில் உள்ளதைக் கூறுவதற்குள் சென்று விட்டார்...!'

'ஒரு வேளை கூற முடியாமலே போய் விட்டால்...!'

'பொறாமை பிடித்த மனமே! வாய் வைக்காதே... கண்டிப்பாக இன்று போன் மூலமாகவாவது தொடர்பு கொள்வார்...'

'போன் மூலமாக...! பார்ப்போம்!'



மனதிற்குள் சமாதானப்படுத்திக் கொண்டாலும், உள்ளே ஒரு பயம் முளை விடாமல் இல்லை.

ஒரு வேளை... தான் தயங்கித் தயங்கி மௌனமாக இருந்ததை, தன்னைப் பிடிக்கவில்லை என்பதாக அர்த்தம் செய்து கொண்டு, கோபித்துக் கொண்டிருப்பாரோ?

அன்றும் எந்தத் தொலைபேசியும் ஜெய்யிடமிருந்து வரவில்லை என்றதும், படபடப்புக் கூடியது.

தீனாவிடம் தொலைபேசி எண் வாங்கிப் பேசிப் பார்க்கலாமா?

முதலில் என்னவென்று சொல்லிக் கேட்பது?

## 7

'வேண்டாம்... ரொம்ப அலைவதாகக் காட்டிக்கொள்ள வேண்டாம்!' என்று உடனே அந்த எண்ணத்தைக் கைவிட்டாள், லயா.

அவளை ரொம்பக் காக்க வைக்காமல், மறுநாளே போன் செய்தான், ஜெய்.

தீனாவிடம் என்ன சொன்னானோ... ரிஸீவரைக் கைகளால் மூடியவாறே, இவளைக் கூப்பிட்டனுப்பிய தீனா... நக்கலாக,

"லயா... லயா நீதானே! அடேங்கப்பா... எனக்குத் தெரியாமலே இவ்வளவு தூரம் வளர்ந்தாகி விட்டதா உங்கள் பழக்கம்...?" என்றவாறே தொலைபேசியை நீட்டினான்.

'உங்கள் பழக்கம்!' என்பதில் கொஞ்சம் அழுத்தம் தெரிந்தது போலிருந்தது.

நல்ல வேளையாக... நாகரிகமாக நகர்ந்து சென்று விட்டான், தீனா.

'சேச்சே! அவர் அந்தப்புறம் ஆவலாகக் காத்துக் கொண்டிருக்கிறார்... நான் ஏதேதோ நினைத்துக் கொண் டிருக்கிறேன்!' என்று தன்னைக் கடிந்து கொண்டவாறே...

"ஹலோ...!"

"டியர்! நான் ஜெய் பேசுறேன்!"

ஒரு பாட்டில் குளுக்கோஸ் உடம்பில் ஏறியதைப் போல், உடம்பில், மனதில் ஒரு தெம்பு உண்டானது.

"உம்..."

"என்ன உம்... கோபமா டியர்?"

"அதெல்லாம் இல்லை!"

"இல்லை... கோபம் இல்லாவிட்டாலும், வருத்தம் இல்லையா?"

மௌனம் சாதித்தாள்.

"சரி... அது போகட்டும்! நேற்று முன்தினம் ஏதோ சொல்ல வந்ததைப் போலிருந்ததே!"

"இல்லையே...! நான் எதுவும் சொல்ல வர வில்லையே!"

"நெஜமாக..."



"நெஜமாக...!"

"சரி... சரி... நான்தான் ஏதோ சொல்ல வந்தாய் போலிருக்கிறது என்று நினைத்து, அது என்ன என்று தெரிந்து கொள்ளப் போன் செய்தேன். சரி... பிசியாக இருப்பாய்... போனை வைத்து விடுகிறேன்."

பதைபதைத்துப் போனாள்.

"ஜெய்... ஜெய்!"

"என்ன லயா?"

"என்ன சொல்ல நினைத்தேன் தெரியுமா?"

"உம்... சொல்லு! அதைத்தானே கேட்கிறேன்."

"அது வந்து..."

" 'அது வந்து...' என்று சொல்லத்தான் வந்தாயா?"

"இல்லை... அது வந்து... அது வந்து... ஐ டு லவ் யூ ஜெய்!"

சொல்லியே விட்டாள் ஒருவாறாக.

அந்த நேரம் தான்தான் ஜீவனே என்று கருதிக் கொண்டிருக்கும் வீட்டிலிருக்கும் அம்மா நினைவு வரவில்லை!

வீட்டின் ஒரே ஆண் மகன் என்ற பொறுப்பை உணர்ந்து... கல்லூரி இந்த இறுதியாண்டு முடிந்த வுடன்... அக்காவின் பொறுப்பைத் தான் ஏற்றுக் கொண்டு, அக்காவிற்கு அம்மாவை வரன் பார்க்கச் சொல்ல வேண்டும் என்று கனவுகளுடன் கல்லூரி சென்றிருக்கும் முகேஷ் நினைவிற்கு வரவில்லை.

'தன்னை விட வசதியில் இவ்வளவு உயர்ந்தவனாக இருக்கிறானே?' என்று அன்றொரு நாள் மருகியிருந்த போதிலும்... தனக்குக் கிடைப்பானா என்ற நினைவு வரவில்லை.

சொல்லப் போனால்... அவன் வாயிலிருந்து உதிரும் வார்த்தைகளைத் தவிர வேறு எதுவுமே அவள் மண்டைக்குள் ஏறவில்லை.

தொலைபேசியை வைத்துவிட்டுச் சென்ற பிறகும்... அவள் மனம் ஒரு நிதானத்தில் இருக்கவில்லை.

"ஏன்டி... இன்றைக்கு என்ன...? ஒரு மாதிரியா இருக்கே! உடம்பு சரியில்லையா? இல்லையே... பார்த்தா அப்படியும் தெரியவில்லையே! ஒரு மார்க்கமாகத்தான் இருக்கே!" – சக தோழி ஷீலா கேட்டாள்.

## 8

ஏதோ எல்லாமே இன்று நேற்று நடந்ததைப் போலிருந்தது. ஆனால், லயா, தனக்கு எல்லாமே ஜெய் தான் என்பது போலாகி விட்டாள்.

முன்பு இவளுக்கு ஜெய்யிடமிருந்து தொலைபேசி அழைப்பு வரும்போது, கிண்டலாகச் சிரித்தவாறே இவளிடம் ரிஸீவரை நீட்டுவான், தீனா.

இன்றோ, கிட்டத்தட்ட கடையில் எல்லாருக்குமே இவர்கள் விஷயம் தெரிந்து விட்டது.



முன்பு இவன் வரும்போதெல்லாம், அவளை வம்புக் கிழுக்கும் சக தோழிகள், இப்போதெல்லாம் ஜெய்யைப் பார்த்ததுமே, 'ஏய்... உன் ஆளு!' என்று இவளைத் தனியே விட்டு விட்டு நழுவ ஆரம்பித்திருந்தனர்.

அன்று மாலை... ஊரின் எல்லைப்புறத்தில் இருந்த அரசமரப் பிள்ளையார் கோயில்...

விநாயகர் சதுர்த்தி தவிர... பிற நாட்களில் பிள்ளையாரைத் திரும்பிப் பார்க்கக்கூட யாரும் வர மாட்டார்கள்.

காலையில் கோயில் திறந்து, அபிஷேகம் பண்ணி விட்டு, சன்னதியைப் பூட்டிக் கொண்டு, குருக்கள் கிளம்பினா ரென்றால், பின் மறுநாள்தான் விஜயம்!

இந்த ஆள் நடமாட்டம் இல்லாத கோயில் பிராகாரத்தில் தான் இவர்கள் காதல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது.

"ஜெய்..."

"என்ன லயா...?"

"போங்க நீங்க...!"

"சரி, கையை விடு. நான் போறேன்!"

செல்லமாய்... அவன் தலையை உலுக்கினாள்.

"என்னை விட்டுட்டுப் போயிடுவீங்களா என்ன?"

"சரி, சொல்லு... என்ன?"

"உங்ககூடச் சேர்ந்து, எனக்கு என் ஒரிஜினல் பேரே மறந்திடும் போலிருக்கு!"

"அப்படியே மறந்தாதான் என்ன? லயாவே நல்லாத் தானே இருக்கு! எனக்கு என் கண்ணம்மா எப்பவும் லயாதான். ரெண்டே எழுத்துப் பேர்... அழகா 'சிக்'கென்று இருக்கு... உன்னை மாதிரி!"

"அடச்சே! இதுதான் சாக்குன்னு ஓவரா வழியாதீங்க!"

"சரி... இப்படி... யாரோ போல்... எங்கேயோ தள்ளி உட்காரவா என்னை வரச் சொன்னே? பக்கத்துல வாயேன்!"

"உதை விழும். இது என்ன...? பிள்ளையார் கோயில்... கண்ணு தெரியுதா, உங்களுக்கு?"

"ஓ! பிள்ளையார் பிரம்மசாரியாயிற்றே... கல்யாணமே பண்ணிக்காதவரேன்னு சொல்ல வரயா? நாளையிலேர்ந்து நம்ம ஜாகையை முருகன் கோயிலுக்கு மாத்திடலாம்!"

"ஜெய்... உங்களுக்கு எப்பவுமே எதுவுமே விளையாட்டுத்தானா? இப்படியே நாம சந்திக்கும் போதெல்லாம், கடி ஜோக்காப் பேசியே காலத்தைத் தள்ளிட்டிருந்தீங்கன்னா காலத்திற்கும் இப்படி உங்களைத் திருட்டுத்தனமாச் சந்திச்சிட்டிருக்க வேண்டியதுதான்!"

"நீ சொல்றது சரிதான்! ஆனா... அதற்கும் என் பெண்டாட்டி ஒத்துக்க மாட்டாளே!"

"என்னது...? உங்க பெண்டாட்டியா?"

"ச்சே! நீ பக்கத்திலே இருந்தா... எனக்கு சீரியஸா எப்படிப் பேச முடியும்? சரி... சரி... கோபிக்காதே! விஷயத்திற்கு வர்றேன். எனக்கு வீட்டில் பெண் பார்க்கும் படலத்தை அம்மா ஜோராக ஆரம்பிச்சிட்டாங்க... லயா கண்ணம்மா!"



கவலையாய்ப் பார்த்தாள், லயா.

"நீங்க நம்ம விஷயத்தை எப்போ, எப்படி வீட்டில் சொல்லப் போறீங்க?"

"உன் வீட்டில்...?"

"என் வீட்டில்... எங்க அந்தஸ்திற்கும் உங்க அந்தஸ்திற்கும் ஏணி வைத்தால்கூட எட்டாதே! அதைக் காட்டித்தான் மறுப்பார்கள். உங்கள் வீட்டிலேயே சம்மதித்து விட்டார்கள் என்றால், என் வீட்டில் சம்மதம் வாங்குவது எளிது."

## 9

"இல்லை லயா... அதற்கு சான்ஸே இல்லை. என் அம்மா பாசமே உருவானவங்க. அவர்களைப் பற்றிய கவலை இல்லை. ஆனால், என் அப்பா... அவர் ஒப்புக் கொள்வாரா என்பது..."

"ஜெய்..." – ஏறக்குறைய கத்தியே விட்டாள்.

"ஜெய்... என்ன இது? இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடறீங்க?"

"யெஸ்... அதனால்... அதுக்கு முன்னாடி... நான் என்ன சொன்னாலும் கேட்பியா?"

"என்ன... இப்படிக் கேட்டுட்டீங்க! என் மேல் நம்பிக்கை இல்லையா?"

"அதற்கு இல்லை... இப்போ சரின்னு சொல்லிட்டுப் பின்னாடி வருத்தப்படக் கூடாது இல்லையா?"

"பலமான பீடிகை எல்லாம் போதும். விஷயத்திற்கு வாங்க!"

அவள் கைகளைப் பற்றி, விரல்களை மெல்ல நீவியவாறே...

"என்கூட... நான் கூப்பிட்டா வந்திடுவியா?"

"உங்ககூட... என்ன சொல்றீங்க?"

"யெஸ்...! நம் வீட்டார் சம்மதத்தோட திருமணம் செய்துக்கணும்னா... இந்த ஜென்மத்துல நாம இணைய முடியாது. அதனால..."

"அதனால..." - கண்களை இடுக்கியவாறே அவனை நேர்பார்வை பார்த்தாள், அவள்.

"அதனால... நாம கல்யாணம் பண்ணிக்கிட்டு வீட்டுப் பெரியவங்ககிட்டே ஆசிர்வாதம் வாங்கிக்கலாமே!"

"சுருக்கமாக... ஓடிப் போலாம்னு சொல்றீங்க!"

"நாம் என்ன ஒரேயடியா ஓடியா போகப் போறோம்? என்ன... சொல்லாமக் கல்யாணம் பண்ணிக்கிட்டு அப்புறம் சொல்லலாம்னு சொல்றேன்."

மேலும் சிறிது நேரம் அவனிடம் ஆர்க்யூ செய்து தோற்ற லயா... இறுதியில்... இருவரும் இணைய,,, ஜெய் சொல்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவிற்கு வந்தாள்.



அம்மாவிற்குத் தெரியாமல் ஒரு துரும்பும் கிள்ளிப் போடும் பழக்கம் இல்லாதவள் இன்று இப்படி ஒரு முடிவிற்கு எப்படி இசைந்தாள்? அவளுக்கே அது புதிராகத் தான் இருந்தது.

ஜெய்யிற்கும் கூட... அப்பா, பிஸினெஸ் விஷயமாய் அடிக்கடி வெளிநாடுகளுக்குப் பறப்பவர். என்றாலும்... அவருக்குத் தெரிவிக்காமல் எந்த ஒரு முடிவும் அவனோ, அம்மாவோ எடுக்க மாட்டார்கள்.

இன்றோ... அப்பா, அம்மா சம்மதமில்லாமல், வாழ்க்கையின் ஒரு முக்கிய முடிவைத் தானே எடுக்கும் அளவிற்கு லயா மீதான தன் காதலை எண்ணி வியந்தான்.

"அப்புறம் என்ன? இருட்டு வர ஆரம்பிக்கிறது. நீ புறப்படு. நான் இது விஷயமாய் என் நண்பர்களிடம் பேச வேண்டியிருக்கிறது. உன்னைப் பஸ் ஸ்டாப்பில் விட்டு விடுகிறேன். வா!"

காதல் மனிதனை எவ்வாறெல்லாம் ஆட்டுவிக்கிறது?

அந்த நிமிடம்... எவ்வளவு பெரிய முடிவையும் எடுக்க மனது எவ்வளவு சுலபமாக மாறிவிடுகிறது!

"ஏன்டி இவ்வளவு லேட்டு? அப்படியே லேட்டானாலும் ஒரு போன் செய்தாவது சொல்லுவியே!"

அம்மாவின் கேள்விக்குச் சரளமாகப் பொய்யான ஒரு பதிலை எடுத்து விடுவது அவளுக்கு வியப்பாக இருந்தது.

ஒரு கணம்... ஜெய் பற்றிக் கூறிவிடலாமா என்றுகூட எண்ணம் வந்தது.

ஆனாலும்... தம்பி சின்னவன் இருக்க, அம்மாவையும் பார்த்துக் கொண்டு வீட்டிற்கு மூத்தவளான அவள்... காதல் பற்றிப் பேச ஆரம்பிப்பதே... என்னவோ பெரிய தப்பான செயல் போன்று ஒரு தயக்கம்.

'சொல்லவே தயங்குகிற நீ, காதல் செய்கிறாயா...? திருமணமும் அம்மாவிற்குத் தெரியாமல் செய்து கொள்ளப் போகிறாயா?' என மனம் இடித்துரைத்தது.

## 10

**சொ**ன்னபடியே... ஜெய் எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டிருந்தான்.

திரும்பத் திரும்ப,.. "பெற்றோரிடம் எடுத்துச் சொல்லி, அவர்கள் சம்மதத்துடன் திருமணம் செய்து கொள்ளலாமே!" - என்று லயா எடுத்துச் சொல்லிப் பார்த்தாள்.

"நீ உண்மையிலேயே என்னை விரும்புகிறாய் இல்லையா...? அப்புறம்... நம் திருமணம் நடக்க வேண்டுமென்றால், அதற்கு இதுதான் ஒரே வழி!"

எரிச்சல் சற்றே தொனிக்கச் சொல்லிவிட்டாலும், லயாவின் சூம்பிய முகம் கண்டபின், இளகி விடுவான் ஜெய்.

"என்னடா கண்ணா... லயா! இவ்வளவு ரிஸ்க் எடுத்து என் அப்பா, அம்மாவை ஏமாற்றி எல்லாம்... எல்லா ஏற்பாடும் யாருக்காக? உனக்காகத்தானே!

"நீ கிடைக்க வேண்டும் என்றுதானடா இவ்வளவும். இங்கே பார்... எல்லாம் கூடிய சீக்கிரம் சரியாகிவிடும். நாம்



கணவன் மனைவியாகக் காலில் விழுந்து, 'ஆசிர்வாதம் செய்ங்க...!' என்றால், எப்படியும் என் அப்பா, அம்மாவும் சரி... என் மாமியாரும் சரி, இளகி விடுவார்கள். அதோ பார்... அந்தச் சுண்டல் பையன் கூட, நான் ஏதோ உன்னை ஈவ் டீசிங் செய்வதைப் போல் வேடிக்கை பார்க்கிறான் பார்!"

தன்னை மறந்து சிரிக்கிறாள், லயா.

அன்று இரவு பூராவும், அவளுக்குப் பொட்டு உறக்கமில்லை.

நாளை நடக்கப் போவதை அறியாது, நல்ல உறக்கத்தில் இருந்த அம்மாவைப் பார்க்கிறாள்.

விடிவெள்ளி வெளிச்சத்தில் சீரான மூச்சு வாங்கி மார்புகள் ஏறி இறங்க, ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த அம்மாவின் முகத்தைப் பார்க்கிறாள்.

என்ன ஒரு லக்ஷ்மி கடாட்சம்! தனக்கு ஏன் முகம் பேயறைந்து... களை யிழந்து...

தப்பு செய்யப் போகிறோம் என்ற மனசின் உந்துதலா?

ச்சே! தலையை உலுக்கிக் கொண்டாள்.

காதலிப்பது தவறா? இல்லையே...! பிடித்தமான வனைத் திருமணம் செய்து கொள்ளப் போவது தவறா? இல்லையே...!

என்ன... தான் அப்படியே ஓடிவிடவா போகிறோம்!

ஜெய்யோடு வந்து அம்மாவின் காலில் விழுந்தால், நூறு சதவீதம் தன்னை மன்னித்து விடுவாள்.

மெல்ல எழுந்து அடுத்த அறைக் கதவை மெல்லத் திறந்து... முகேஷைப் பார்த்தாள்.

பாவம்... இதுவரை படித்துவிட்டு இப்போதுதான் கண்ணயர்ந்திருந்தான்.

'மன்னிச்சுக்கோடா முகேஷ்... அக்கா உன்கிட்ட கூட...' - மனம் விம்மியது.

நாளை... எனக்காகப் பதறுவாயா? கோபப்படுவாயா? அம்மாவிற்காக வருத்தப்படுவாயா? உன்னால்... வெளியே தலைகாட்ட முடியாமல் போயிற்றே என்று விசனப்படுவாயா?

ஏதோ தோன்றியவள் போல்... பேப்பரையும், பேனாவையும் எடுத்து வைத்துக் கொண்டு... தான் ஜெய்யை விரும்புவதையும், திருமணம் செய்து கொள்ளப் போவதையும் எழுதியவள், தொடர்ந்தாள்.

'நான் உன்னிடம் சொன்னால் நீ மறுக்க மாட்டாய் என்பது தெரியும், அம்மா! ஆனாலும், இதன் மூலம் ஜெய்யின் வீட்டிற்கு எவ்வாறாவது தெரிந்து விட்டால்... எங்கள் திருமணம் என்பது பகற் கனவாகி விடும். எனவே தான் உனக்கும் தெரியப்படுத்த முடியாமல் போகிறேன்...!

'ஜெய் இல்லாத ஒரு வாழ்வை என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை, அம்மா! அவர் கிடைக்கா விட்டால் இறந்து விடுவாள் உன் மகள். எனவேதான் இப்படி ஒரு முடிவு எடுக்கிறேன். என்னை மன்னித்து விடம்மா!' என்று உருக்கமாக எழுதி... அம்மா கண்ணில் படும்படி வைத்தாள்.



## 11

தெரு முனையில் தன் காருடன் காத்திருந்தான் ஜெய் கிஷோர்.

பழனி முருகன் சன்னதியில்... நண்பர்கள் தயாராகத் திருமண ஏற்பாடு களைச் செய்திருந்தனர்.

தீனாவும் வந்திருந்து மாப்பிள்ளைத் தோழனாய்ச் சிறப்பிக்க, மனதின் ஒருபுறம் கலக்கம் தோன்றினாலும், அதை வெளிக்காட்டாது... முகம் மலர்ந்து இருவரும் ஐயர் சொன்னதைத் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தனர்.

நல்ல நேரம் துவங்கியதும்... நண்பர்கள் அட்சதை தூவி வாழ்த்த... ஜெய் லயாவை இல்வாழ்க்கைத் துணைவி யாக்கிக் கொண்டான்.

செலவிற்காகப் பணத்தைத் தாராளமாய்த் தண்ணீர் போன்று ஜெய் அள்ளிவிட... நண்பர்கள் குழாம் திருமணம் முடிந்த கையோடு சாமி தரிசனம்... பின் உயர்தர உணவு விடுதியில் சாப்பாடு... என்று ஏற்பாடு செய்து அமர்க்களப் படுத்தியிருந்தான்.

ஒரு வழியாக மாலை நண்பர்கள் விடைபெற்றுச் செல்ல... ஜெய்யும், லயாவும் தனித்து விடப்பட்டனர்.

போகும் முன் ஜெய்யைத் தனியாகக் கூப்பிட்டு... அவன் நண்பர்கள் ஏதோ கூற, லயாவை ஒரு பார்வை பார்த்துவிட்டுத் திரும்பிய அவன் முகம்... வெட்கச் சிரிப்பைப் பூசிக் கொள்ள, தலையில் அடித்துக் கொண்டான்.

"ச்சீ... போங்கடா!"

"அப்புறம்... என்ன சொன்னாங்க...?"

சற்றே பிகு செய்து கொண்ட ஜெய், இவள் காதோடு ஏதோ சொல்ல...

"போங்க... நீங்களும் உங்க நண்பர்களும்!"

தலையில் அடித்துக் கொண்டாள்.

"என்ன... நான் சொன்னது சரிதானே!"

அவள் ஏதும் கூறுமுன், அவர்கள் பக்கம் வந்தான் தீனா.

"என்னம்மா! பெரிய புளியங் கொம்பாய்த்தான் பிடித் திருக்கே! என்னையும் கொஞ்சம் பழைய முதலாளியாய் ஞாபகம் வெச்சுக்கோ! பெரிய முதலாளியம்மா ஆயிட்டே! இனிமேலும் என் கடைக்கு எங்கே வரப் போறே?" - பொய்யாய்ப் பொறாமை காட்டியவன்...

"ஐ விஷ் யூ போத்... எ வெரி ஹாப்பி மேரிட் லைஃப்..." என்று வாழ்த்தியவன், நாகரிகமாக விடை பெற்றுக் கொண்டான்.

நடுவே... போன் செய்தாவது அம்மாவிடம் பேச நினைத்தவளைத் தடுத்து விட்டான் ஜெய்.

"வேண்டாம்... போனில் சரிப்படாது. என் அப்பா நாளை மறுதினம் வெளிநாட்டிலிருந்து வந்து விடுவார். நாலே நாட்கள் பொறுத்துக் கொள்! மதுரைக்குப் போய் விடலாம். நேரில் நம்மைப் பார்த்தால், கண்டிப்பாக அவர்கள் கோபம் போய்விடும்."

அவளுக்கே பிரமிப்பாய் இருந்தது.



அன்று பார்த்துப் பார்த்துப் பிரமித்த ஜெய்யின் அம்மாவிற்கு மருமகளா நான்?

அவர்கள் முகத்தில் தெரிந்த சாந்த ஸ்வரூபம்... அவர் தங்களை நிச்சயம் மறுக்க மாட்டார் என்று நினைக்க வைத்தது.

ஜெய் என்ன சொன்னாலும் தலையாட்டும் மன நிலையிலேயே இருந்தாள், லயா.

இருந்தாலும், மனதில் ஒரு பயம் சின்னதாக முளை விட, ஒரு கலக்கம் பூசிக்கொண்ட முகத்தோடு... ஜெய்யை ஏறிட்டாள்.

அவர்கள் தங்கியிருந்தது மதுரையிலேயே பெயர் சொல்லக்கூடிய, விரல் விட்டு எண்ணக்கூடிய லாட்ஜுகளில் ஒன்று.

தன் மடியில் தலைவைத்துப் படுத்தவாறே கைகளால் சில்மிஷம் செய்ய நேரம் பார்த்திருந்த ஜெய்யை ஏறிட்டாள்.

"என்னாங்க...! நாம நம் கல்யாணத்தை ரிஜிஸ்டர் செய்யவேயில்லையே! எதுக்கும் பதிவு செய்து வைத்து விடலாமேங்க!"

விருட்டென எழுந்து உட்கார்ந்தான்.

"லயா...! என்ன சொல்ல வர்றே? என்னை நம்பலை நீ? அப்படித்தானே! பதிவு பண்ணி..."

அவசரமாய் அவன் வாயைத் தன் மெல்லிய கரங்களால் பொத்தினாள்.

"ஐயையோ! அப்படியெல்லாம் இல்லீங்க! உங்களுக்கு இஷ்டமில்லைன்னா வேண்டாம்!"

## 12

தான் எதேச்சையாகத்தான் சொன்னாள். மற்றப்படி ஜெய்யை நம்பாமல் இல்லை... என்று கூறி அவனைச் சமாதானப்படுத்த அவள் ரொம்பவே மெனக்கெட வேண்டி யிருந்தது.

"என்னங்க...! என்ன... இன்னும் கோபம் போகலையா?"

"பின்னே என்ன? உன்னை ஏமாத்த நினைக்கிறவனா இருந்தா என்னிக்கோ உன்னைத் தொட்டுட்டு, ஜஸ்ட் லைக் தட்ன்னு போகத் தெரியாதா எனக்கு?"

"ஐயையோ... இல்லீங்க!"

"இப்போகூட ஒன்னும் குறைஞ்சிடலை லயா..."

ஆரம்பித்தவனை வாதாடிப் புரிய வைக்க முடியாது என்று உணர்ந்தவள்...

"என்னடா... என்ன சொல்லிட்டேன் இப்ப...? எல்லாம் உன் ஜாக்கிரதைக்குத்தான் சொன்னேன்...!" கண்ணடித்த வாறே...

"நானே உன்னை அம்போன்னு விட்டுட்டு... உன்னைவிடப் பணக்காரனா... ஸ்மார்ட்டா... யாராவது...!"

"அடப்பாவி...!" சிரித்தவாறே சீரியஸாக முறைத்தவனை, மூர்க்கத்தனமாய் இழுத்து அணைத்து... அவன் மேற்கொண்டு ஏதும் பேச முடியாதபடி, யோசிக்க முடியாதபடி செய்தாள் லயா!



திருமணம் முடிந்து வந்த அந்த இரண்டு நாட்களும்... அவர்களைப் பொறுத்தவரை... மண்ணிலேயே சொர்க்கமாகவே கழிந்தன.

நன்கு இருட்டிய பிறகு அவனுடன் ஷாப்பிங் போனாள். அவள் வேண்டுமென்றுகூடக் கேட்க வேண்டியிருக்கவில்லை... அவள் பார்த்தவற்றை எல்லாமே வாங்கிக் குவித்தான்.

"ஹும்... இரண்டு நாட்கள் இப்படி வேஸ்ட் செய்ததற்குப் பேசாமல் எங்காவது ஹனிமூன் போய் விட்டு வந்திருக்கலாம்...டி...!"

"என்னங்க... நான் சொன்னது மறந்து போச்சா? நம்ம இரண்டு பேர் வீட்டிலேயும் நம்மை ஏற்றுக்கொண்ட பிறகுதான் நம் வாழ்க்கையில் எந்த ஒரு சந்தோஷமும்...!"

நடந்து கொண்டே இருந்தான்.

"என்ன சொன்னே? எந்த ஒரு சந்தோஷமும்... அச்சச்சோ! அப்போ, நேற்று சந்தோஷமா இருந்ததெல்லாம் தப்பாச்சே! என்ன லயா செய்ய...? பெரிய தப்பு செய்திட்டோமே...! அப்போ, அதை இன்று நீ திருப்பிக் கொடுக்கிறே! அப்போதான் தப்பு சரியாகும்."

பொய்யாய் இவளைச் சீண்டி... அவள் என்ன பேச வந்தாலும்... பேச விடாமல் செய்வதே அவன் வாடிக்கை.

"என்னங்க... கொஞ்சம் சீரியஸாத்தான் பேசுங்களேன்!"

"ஓ.கே... ஐயாம் சீரியஸ்! எந்த ஆஸ்பத்திரிக்குப் போகலாம்?"

"என்னாங்க... உங்களால எப்படி இப்படி எதுவும் நடக்காத மாதிரி இருக்க முடியுது? என்னால... அங்கே அம்மா என்ன பதைபதைக்கப் போறாங்களோன்னு அதுவே சதா சிந்தனையில் ஓடிட்டிருக்கு!"

"உன் சின்ன மண்டைக்கு ஏன் யோசிக்கப் பெரிய விஷயமெல்லாம் தர்றே? உங்க வீட்டில் அம்மாவிடமும், தம்பியிடமும்... வேலை பார்க்கும் இடத்தில் எல்லோருடனும் டூர் போவதாகச் சொல்ல வேண்டியதுதானே!"

"சொன்னால்... அதெல்லாம் அம்மா நம்பமாட்டார்கள்!"

"அதனால்தானே லெட்டர் எழுதி வைத்துவிட்டு வந்திருக்கிறாய், இல்லையா?"

"உம்..."

"அப்புறம் என்ன? எப்படியும் நீ வேலை பார்க்கும் 'ஸ்ருதிலயா'வில்தான் விசாரிப்பாங்க. தீனா எல்லாவற்றையும் எப்படியும் சொல்லி விடுவான்!"

"ஐயோ! நான் இதை யோசிக்கவேயில்லையே!"

"குட்டி... நான்தானடா தீனாவிடம் எல்லாவற்றையும் கூறிவிடச் சொன்னேன்!"

"மகள் யாருடனோ ஓடிப் போய்விட்டாள் என்று உன் அம்மா மனம் குமைவதைக் காட்டிலும், என்னைப் பற்றித் தெரிந்து வைத்திருக்கட்டுமே! திடுமென நாம் போய் நின்றால் உன் அம்மா அதிர்ச்சியடையக் கூடும். எனவேதான் மேலோட்டமாக என்னைப் பற்றிச் சொல்லச் சொன்னேன்."

மெய் சிலிர்த்துப் போனாள், லயா.



என்ன ஒரு தீர்க்க தரிசன முடிவெடுக்கும் திறன்!

'ஜெய்... ஜெய்...' என அவனைப் பற்றியே யோசித்தாளே தவிர, வேறு எதைப் பற்றியும் யோசிக்கவில்லையே!

ஒரு வேகத்தில் லெட்டர் எழுதி வைத்து விட்டு வந்து விட்டாளே தவிர, அதன் பின் என்ன நடந்திருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கும்போதே, குலை நடுங்குகிறதே!

அம்மா... எப்படியும் காதலை ஏற்றுக்கொள்ள மாட்டாள் என்றல்லவா சொல்லாமல் கொள்ளாமல் ஜெய்யைக் கரம் பிடிக்க இப்படி வந்தேன்.

இப்போது... இப்படிக் கல்யாணமே செய்து கொண்டு போய் நின்றால், அம்மா கோபத்தை எப்படி எதிர்கொள்ளப் போகிறாள்?

ஆனாலும்... ஜெய்யின் அருகாமை இருந்தால் போதும்... எப்பேர்ப்பட்ட சோதனையையும் சமாளித்து விடலாம் என்ற நம்பிக்கை அவள் மனதில் மலை போல் இருந்தது.

## 13

அன்று ஜெய்யும், லயாவும் அலங்கார் தியேட்டரின் முதல் காட்சியில் இருந்தனர்.

தன் உலகமே இவன் ஒருவன்தான் என்பது போல், லயா... அழகான டிசைனர் புடவையில் ஒயிலாக அவன் தோளில் சாய்ந்து கொண்டிருந்தாள்.

இவளில்லாமல் தனக்கு ஒரு உலகமே இல்லையென... முகம் நிறையக் காதலுடன், திருமணக் களை இன்னமுமே மிச்சமிருக்க, லயாவைச் செல்லமாகச் சீண்ட முயன்று, அவள் திரும்பி முறைக்க... ஒவ்வொரு முறையாக ஏமாந்து கொண்டிருந்தான் ஜெய்.

"ச்சு...! பின்னாடி எல்லாரும் பார்க்கிறாங்க... சும்மா இருங்க!"

"ச்சு... அவங்க நம்மை ஒன்னும் பார்க்கலை. சினிமா பார்க்கிறாங்க. அதோ அங்கே ஹீரோ பாரேன்!"

உண்மையாக நம்பிச் சட்டென வெள்ளித் திரையை நோக்கி லயா பார்வையைத் திருப்பிய தருணத்தில்... மெல்லமாக இடுப்பைக் கிள்ளிவிட்டு அப்பாவி போல் முகத்தைச் சினிமாவை நோக்கித் திருப்பிக் கொண்டான், ஜெய்.

முதலில் சட்டெனக் கோபப்பட்டவள், அவன் முகத்தைப் பார்த்ததும் சட்டெனச் சிரிப்பைச் சிந்தினாள்.

"ஹும்... இது சரிப்படாது... வாங்க போகலாம்!"

"பேஷா... உடனே வா! ரூமுக்குப் போகலாம், வா!"

"அடிச்சேன்னா...! முதலில் எழுந்து போகலாம் வாங்க!"

பலரது முணுமுணுப்புகளைக் கேட்டபடி, கடந்து வெளியே வந்தார்கள்.

"உம்! இப்போ சொல்லு... ஆட்டோ பிடிச்சு ரூமுக்குப் போகலாம்தானே!"



"இல்லீங்க... என்னமோ மனசு சமாதானமில்லாம இருக்கு! கோயிலுக்குப் போகலாம்ங்க!"

"மகாராணி சொல்லிட்டா மறுப்பேது? அப்படியே செய்யலாம் மகாராணி அவர்களே!"

ஓங்கிய அவளின் கை, அவனை அடிக்குமுன்... ஒதுங்கிச் சிரித்தவாறே ஆட்டோவைக் கூப்பிட்டான், ஜெய்.

பெரிய கோயிலுக்குப் போகச் சொல்லிவிட்டு, அந்த இடைவெளியிலும் லயாவை அணைத்தபடி வெளியே பார்வையை அலைய விட்டவனை... கூப்பிட்டது அவனின் செல்லின் ஒலி!

எடுத்துச் செவி மடுத்தவன்...

"ஹும்... சரி... நான் பார்த்துக் கொள்கிறேன். இப்போதைக்கு யாருக்கும் தெரியாமல் பார்த்துக் கொள்!" - செல்லை அணைத்து பாக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

## 14

ஒன்றும் பேசாமல் வரும் ஜெய்யிடம், என்ன ஏதென்று கேட்கவும் லயாவிற்குத் தயக்கமாக இருந்தது.

முக்கியமான விஷயமாக இருந்தால், தானே கூறியிருப்பானே!

ஏதோ யோசனையாகவே இருந்தவன், கோயிலில் தரிசனம் முடிந்ததும், "கண்ணம்மா... கொஞ்சம் இரு. கொஞ்ச நேரம் உட்கார்ந்து விட்டுச் செல்லலாம்..." என்றான்.

உட்கார்ந்தார்கள்.

"என்னங்க... போன்ல யாரு? போன் வந்ததிலிருந்து ஏதோ யோசனையாகவே இருக்கீங்க?"

"உம்... சரவணன்தான் போன் பண்ணினான். அம்மா... ஜெய் இரண்டு நாளாப் போன் செய்யவே இல்லையேன்னு இவன்கிட்ட கவலையோட புலம்பினாங் களாம். அப்புறம்..."

"அப்புறம்...!"

"அப்பா இன்னிக்கு மதியம் வந்து விட்டாராம். நீ எப்படியாவது நாளைக்கு வந்து விஷயத்தை உடைச்சிடுன்னு சொல்றான்."

"எனக்கும் அதுதாங்க சரின்னு படுது. ஏன்னா... அவங்களா விஷயத்தைக் கேள்விப்பட்டு கண்டுபிடிச்சுட் டாங்கன்னா... மாமாவுக்கு உங்க மேல கோபம் மேலும் ஜாஸ்தியாக வாய்ப்பிருக்கு!"

"அதுதான் யோசிக்கிறேன் லயா... நாளைக் காலை ஏழு மணிக்கெல்லாம் ரெடியாகி விடு. கீழே ரெஸ்டாரன்டில் டிபன் சாப்பிட்டுவிட்டு, உடனேயே ரூம் வெகேட் செய்துட்டுக் கிளம்பறோம்...!"

"சரிங்க!"

"அப்புறம் உன் சைடில் உன் ஃபிரெண்ட் கிட்டே போனில் பேசினாயா? உன் அம்மா ரியாக்ஷன் எப்படியாம்?"

"உங்க ஃபிரெண்ட்... என் பாஸ் தீனா சார் விஷயத்தைச் சொன்னதும், கடைக்கே வந்து அழுது ஆர்ப்பாட்டம் செய்து... உங்க ஃபிரெண்ட்தான் இதுக்கு உடந்தைன்னு அவரைக்கூடத் திட்டிச் சாபமிட்டிருக்காங்க!



"அப்புறம்... நேத்து கூட அனு எங்க வீட்டிற்குப் போய் அம்மாவைச் சமாதானப்படுத்தப் பார்த்தாளாம். 'உன் ஃபிரெண்ட்டை மட்டுமில்ல... உன்னையும் வீட்டு வாசப்படி ஏத்த மாட்டேன்...' அப்படின்னு முகத்திலடிச்ச மாதிரிச் சொல்லிட்டாங்களாம். இன்னும் கோபம் தீர்ந்த மாதிரித் தெரியலைன்னு சொன்னா!"

"உண்மைதான்மா... அவங்க நிலைமையில நம்மை நினைச்சுப் பாரு. நாம பண்ணினது உண்மையிலேயே எவ்வளவு பெரிய நம்பிக்கைத் துரோகம். இதை ஜீரணிக்க அவங்களுக்கு நாம டயம் தரணும். அது வரைக்கும் அவங்க... அதாவது உன் அம்மாவோ, என் அப்பா, அம்மாவோ... என்ன கோபமாப் பேசினாலும் நீ பொறுத் துக்கணும்."

"கண்டிப்பாங்க!"

இது கூட ஜெய்யின் யோசனைதான்.

"பெரிய வீராப்பா லெட்டர் எழுதி வெச்சுட்டு என்கூட வந்துட்டே... இப்போ... மனசுல என்னவாச்சோன்னு கலக்கம். என் கண்ணம்மா இப்படியா அழுது வடியறது?

"பேசாம... உன் ஃபிரெண்ட் கவிதா போன் நம்பர் இருக்கில்லையா? போன் செய்து என்ன நிலவரம்னு கேட்டுப் பாரு!"

அவன் கூறியது சரியென்று படவே, மாலைதான் போன் செய்து பேசியிருந்தாள். அம்மா என்ன திட்டினாலும்

வாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். கோபம் இருக்காதா பின்னே?

ஜெய்யின் நல்ல குணத்தைப் பற்றிப் புரிந்து கொள்ளப் புரிந்து கொள்ள... அம்மா... மாப்பிள்ளையாகக் கண்டிப்பாக ஏற்றுக் கொள்வாள்.

இருவரும் ஹோட்டல் ரூமுக்குக் கிளம்பினார்கள். புதுத் திருமணத்திற்கே உரிய மோகம் அவர்களை ஆட்டுவித்துக் கொண்டிருந்தது.

"என்னவோ, இன்றைக்கே கடைசி ராத்திரி மாதிரி ஏன் இப்படித் தவிக்கிறீங்க?" - லயா.

"எனக்கு என்றுமே முதல் ராத்திரிதான்!" - ஜெய்.

எந்த வேளையில் லயா அப்படிச் சொன்னாளோ?

## 15

அந்த மூன்று நாட்களும் ஜெய்யின் அருகாமையில் தள்ளிப் போயிருந்த கவலைகள், லயா கண்களை மூடினாலும், தூங்க விடாமல் துரத்த ஆரம்பித்தன.

இரவு உடையை இழுத்து விட்டுக் கொண்டு பக்கத்தில் படுத்திருக்கும் ஜெய்யையே இமைக்காமல் பார்த்தாள்.

என் புருஷன்தான் எத்தனை அழகு! அம்மாவும், அத்தை, மாமாவும் எங்களை ஏற்றுக் கொள்வார்களா?

ஜெய்யுடன் நூறு வருஷம் சந்தோஷமாக வாழ வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.



என்ன இருந்தாலும், ஜெய்யின் வீடு, தான் வாழப் போகும் வீடு. அங்கே முதலில் போய்... அத்தை, மாமாவின் கால்களில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கிக் கொள்ள வேண்டும்.

இதற்கு ஜெய் என்ன சொல்வார் என்று தெரிய வில்லை.

ஜெய்... ஊருக்குச் சென்றிருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் அத்தையும், மாமாவும் எப்படி ரியாக்ட் செய்வார்களோ...! பயந்தாள்.

தன் அம்மாவை நினைத்தால்... கை நடுங்க, ஜெய்யை இறுகப் பற்றிக் கொண்டாள்.

நான் வேறு லெட்டர் எழுதி வைத்துவிட்டு வந்திருக் கிறேன்.

தன் முதலாளி தீனா மூலமாக எல்லா உண்மையும் தெரிந்திருக்கும்.

என்னை முதலில் அம்மா வீட்டுப் படியேற விடுவாளா?

தம்பியைத் தனியாகச் சந்தித்துப் பேசினால், என் நிலைமையைச் சொன்னால் புரிந்து கொள்வான்.

ஆனால்... இந்த இரண்டொரு நாட்களில் அம்மா புலம்பிப் புலம்பியே... முகேஷிற்கு இவள் மேல் வெறுப்பு வரும்படி செய்திருப்பாளே!

நாளை விடியப் போவதை எண்ணி, மனம் கலங்கிய வாறே... புரண்டு புரண்டு படுத்தவளை...

"என்னடா... டார்லிங்... தூங்காம என்ன பண்ணிட்டிருக்கே? இங்கே பக்கத்தில் வா!"

இழுத்துத் தூங்க வைத்தான், ஜெய்.

இரவு வெகுநேரம் கழித்துத் தூங்க ஆரம்பித்ததாலோ என்னவோ... காலை ஜெய் எழுப்பியும் தூங்கிக் கொண்டிருந்தாள்.

பாவம்! தூங்கட்டும்... மணி ஐந்தரைதானே ஆகிறது... என்று நினைத்தவாறே... அவளுக்குப் போர்த்தி விட்டு விட்டு அவளைப் பார்த்தவாறே நின்றிருந்தான், ஜெய்.

என்ன அழகு என் பெண்டாட்டி!

இந்த உலகில் யார் எதிர்த்தாலும், எல்லாரையும் பகைத்துக் கொண்டாலும் பரவாயில்லை. என் லயாவை சந்தோஷமாக வாழ வைத்துப் பார்க்க வேண்டும்.

லயா எழுந்திருக்கும் வரை என்ன செய்வது? சரி... மார்னிங் வாக் போய்விட்டு வரலாம்.

லயாவை ஆசையாய் ஒரு பார்வை பார்த்துவிட்டு, ஜெய் கிளம்பினான்.

கதவை மெல்லச் சாத்திவிட்டுச் செல்ல யத்தனித்தவன், பின் லயாவை எழுப்பிக் கதவை உள்ளே பூட்டிக் கொள்ளச் சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

விடிந்தும் விடியாத காலைப் பொழுது. ஜன நடமாட்டம் துவங்கி விட்டிருந்தது.

வீட்டில்... அப்பா தங்கள் திருமணத்தை ஏற்றுக் கொள்வாரா? அம்மா, லயாவைத் தங்கள் மருமகளாக



ஏற்றுக் கொள்வார்களா? உள் மனதில் எழுந்த கேள்வி அவன் மனதை வண்டாய்க் குடைந்தது.

லயாவையே திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற தீராத ஆசையினாலும், அவள் மனதைக் கலவரப் படுத்த வேண்டாம் என்று நினைத்ததாலும், பாஸிட்டிவாகவே கூறியிருந்தாலும், தன் அப்பாவை நினைத்து அவனுக்கு ஒருவிதக் கலக்கமே உருவானது. அவருக்கு அந்தஸ்து ரொம்பவும் முக்கியம். லயாவை ஏற்றுக் கொள்வாரா?

ஹோட்டல் அறையிலிருந்து கிட்டத்தட்ட இரண்டு கிலோ மீட்டர் தள்ளி வந்து விட்டிருந்தான்.

லயாவைப் பற்றியும், தங்கள் எதிர்காலத்தைப் பற்றியுமே சிந்தனை வயப்பட்டவனாக வாக் செய்து கொண்டிருந்தவன்...

எதிரே திருப்பத்தில்... காலை நேரம்தானே, போக்கு வரத்து எங்கே இருக்கப் போகிறது என்ற அலட்சியத்தில், நல்ல வேகத்தில் திரும்பிக் கொண்டிருந்த லாரியைக் கவனிக்கத் தவறியிருந்தான்.

## 16

**யா**ர் எதைப் பற்றியும் கவலையின்றி விதி தன் வேலையைச் செய்து கொண்டிருந்தது.

லாரியைக் கடைசி நொடியில் பார்த்து, 'ஹே...' என்று கத்தியவாறே, ஏதாவதொரு புறம் ஒதுங்க முயற்சித்தவனாக, இப்படியும் அப்படியும் ஜெய் அல்லாடியும் கூட... அம்முயற்சி தோற்றுவிட்டது.

லாரி டிரைவரின் கடைசி நிமிஷ முயற்சியும் தோற்றுப் போக, நிமிஷ நேரத்தில் லாரியின் ராட்சஷ சக்கரங்களுக்கு இரையாகிப் போனான் ஜெய்!

லயா... தானாக விழிப்பு வந்து பார்த்தபோது, மணி ஏழு.

அடடா! இவ்வளவு விடிந்து விட்டது. முதல் நாள் இருவரும் வெளியே அலைந்துவிட்டு வந்ததன் அலுப்பு இன்னமும் மிச்சமிருந்தது.

'அட...! இன்று அல்லவா அத்தையையும் மாமாவையும் போய்ப் பார்க்க வேண்டும். அம்மா, தம்பியையும் போய்ப் பார்க்க வேண்டும்.'

'ரெடியாக வேண்டுமே! இந்த ஜெய்யாவது எழுப்பியிருக்கக் கூடாது?'

செல்லமாகக் கோப எண்ணத்துடன் எழுந்தவள், ஜெய் படுத்திருந்த இடம் காலியாக இருப்பதைக் கண்டதும் முதலில் துணுக்குற்றாள்.

'அட...! அவர்தான் அப்போதே வாக்கிங் கிளம்பினாரே! எழுப்பிப் பூட்டிக் கொள்ளச் சொல்லிவிட்டுத்தானே போனார்!'

செல்லமாகத் தன்னைத்தானே நெற்றியில் அடித்துக் கொண்டாள். பின், படுக்கையிலிருந்து எழுந்து, நைட்டியைச் சரி செய்து கொண்டு, தன் காலை வேலைகளை முடித்துக் கொண்டு, ஜெய்க்காகக் காத்திருக்கத் தொடங்கினாள்.

அம்மா எப்படி எதிர் கொள்வாள்? கண்டிப்பாக... வாசலிலேயே திட்டி, மண் தூற்றி அனுப்ப மாட்டாள்! எத்தனை சினிமாக்களில் பார்த்திருக்கிறாள்.



ஆனால், அம்மா தன் மீதும், முகேஷ் மீதும் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாள்!

கோபப்படுவாளே தவிர... எப்படியும் வீட்டினுள் அனுமதிப்பாள். வெட்கத்தை விட்டாவது கெஞ்சி, அம்மாவைச் சமாதானப்படுத்திவிட வேண்டும்.

ஜெய்யையும், தன்னையும் வீட்டினுள் நுழைய அனுமதித்தாலே போதும்! ஜெய் தன் நல்ல உள்ளத்தாலும், உயர்ந்த குணத்தாலும், நம் வீட்டு மருமகனாக உங்கள் இருவர் மனதிலும் இடம் பிடித்துக் கொள்வார் அம்மா...!

மனதிற்குள் கூறிக் கொண்டாள்.

இப்படிச் சிந்தனை வயப்பட்டு உட்கார்ந்ததிலேயே இன்னமும் ஒரு பதினைந்து நிமிடங்கள் ஓடிப் போய்விட... மணியைப் பார்த்த லயா திடுக்கிட்டாள். ஏழு மணி முப்பது நிமிடங்கள்.

இன்னமும் கணவரைக் காணோம் என்றதும், முதல் முறையாக மனதில் ஒரு பயம் முளை விட்டது.

படபடக்கும் இதயத்தோடு... கீழே போய் அவருடைய கைபேசி நம்பருக்குப் போன் செய்து பார்க்கலாமா என்று யோசித்த விநாடி... ஜெய் எடுத்துச் செல்லாமல் விட்டு விட்டுப் போயிருந்த அவனுடைய கைப்பேசி டீப்பாய் மேலிருந்தது கண்களில் பட்டது.

நடுங்கும் கரங்களுடன் அதனை எடுத்தாள், லயா.

இது ஜெய்யின் கைபேசி. என்ன செய்வது? யாரைக் கேட்பது? தானே ஊருக்குப் புதுசு...

செய்வதறியாது அவள் திகைத்துக் கொண்டிருக்கும் போது, வாயில்மணி ஒலித்தது.

ஜெய்யாகத்தானிருக்கும் என நினைத்து, ஒரு சண்டைக்குத் தயாராகிக் கதவைத் திறந்தவளுக்கு ஏமாற்றம்.

அழைத்திருந்தது ரூம் பாய்.

"காபி, டீ ஏதாவது கொண்டு வரட்டுமா, மேடம்? டிபன் கீழே ஹோட்டலில் கிடைக்கும்... அல்லது டிபனையும் இங்கே...!"

"இப்போ எதுவும் வேண்டாம் தம்பி! சார் வாக்கிங் போயிருக்கிறார். வந்ததும் இன்டர்காம் செய்யும்போது கொண்டு வந்தால் போதும்!"

அவனை அனுப்பியதும்தான், அவன் ஒரு மாதிரி பார்த்துக் கொண்டே சென்றது உறுத்தியது.

இங்கே நின்றாள். அங்கே நின்றாள். நேரம் ஆக ஆக... மனதைப் பயம் பிறாண்டத் தொடங்கியது.

கைபேசியில் தொடர்பு கொள்ளலாம் என்றால் அதுவும் இங்கேயே இருக்கிறது.

முதன் முதலாக, அத்தை, மாமாவைப் பார்க்கப் போக வேண்டும். அம்மா, தம்பியைப் பார்க்கப் போக வேண்டும். முதன் முதலாக வாழ்க்கையைத் துவங்கும் தினம்...

வாக்கிங் சென்றவர் இப்படியா லேட் செய்வது... என்று முதலில் ஜெய் மீது கோபப்பட்டவள், நேரம் ஆக ஆக பயப்படத் துவங்கினாள்.

மெல்லக் கைபேசியை எடுத்து, நடுங்கும் கரங்களுடன் ஜெய்யின் நண்பனைத் தொடர்பு கொள்ள முயன்றாள்.



## 17

இப்போதும் அன்று நடந்ததை நினைக்கும்போதே கைகள் நடுங்கின, ஆதிரைக்கு.

முந்தானையால் கன்னங்களைத் துடைத்துக் கொண்டாள்.

ஆச்சு! இது நடந்து இருபத்தொரு வருடங்கள் நிமிடமாய் ஓடிவிட்டன.

ஆதிரைக்குத் தன் எண்ணங்களை நினைத்து, அவளுக்கே ஆச்சரியமாக இருக்கும்.

லயா... லயா... என்று உருகி உருகித் தன்னைக் காதலித்த, மணந்த ஜெய் தனக்குத் துரோகம் பண்ணி விட்டதை எண்ணி, அவள் மனம் மிகுந்த வருத்தத்தைச் சுமந்தாலும், அவளால் ஏனோ அவன் காதலை வெறுக்க முடியவில்லை.

தன் காதலுக்கு ஜெய் தகுதியானவன் இல்லை என்பதை விதி நிரூபித்து விட்டாலும், தான் ஜெய் மீது கொண்ட காதல் எவ்வளவு ஆழமானது என்பதை அவள் அறிவாள்.

அக்காதலால்தான் எத்தனை சிலுவைகளைச் சுமந்திருக்கிறாள்! எத்தனை அவமானங்களைப் பெற்றிருக்கிறாள்.

இப்போதெல்லாம் அவள் எந்த ஒரு கடந்த கால விஷயத்தைப் பற்றியும் ஒரு முடிவிற்கு வருவதில்லை என்று வைத்து விட்டாள்.

கடலோரம் நின்றிருக்கையில், வந்து வந்து கால்களை நனைத்துப் போகும் அலைகளைப் போல், அவள் எண்ண ஓட்டத்தில்... கடந்த காலக் காதல்... ஆருயிர் ஜெய்... அவன் பரிசாய்த் தந்த ஏமாற்றங்கள் என... பல்வேறு எண்ணங்கள் வந்து மோதித் திரும்பிப் போகும்.

எல்லாவற்றிற்கும் வெறும் சாட்சியாக மட்டுமே இருக்கப் பழகிக் கொண்டு விட்டாள்.

இப்போது, அவள் முன் உள்ள கடமை ஒன்றே ஒன்றுதான்.

அவளே எல்லாம் என்றிருக்கும் மனோ! வேறு எதிலும் சிந்தனையைச் சிதறவிட அவள் தயாராயில்லை.

ஓரிரு சமயங்களில் நினைத்துக் கொள்வாள்.

'மாத நாவல்களிலும், திரைப்படங்களிலும் வருவதைப் போல, ஜெய் மணந்து கொண்ட பெண் கான்சர் நோயாளியாகவோ... ஹார்ட் பேஷன்ட்டாகவோ இருந்து... அதை மறைத்து ஜெய் தலையில் கட்டி...' எண்ணங்கள் இறக்கை கட்டிப் பறக்கும்.

'அப்புறம் அந்தப் பெண் இறந்த பின்... இப்போதாவது தந்தையை மீறி... தன்னோடு வாழத் தன்னைத் தேடி வந்தால்...'

ஒரு புறம் மனதின் ஆசை எண்ணங்களாய் வெளிப்பட...

மறுகணமே, மானசீகமாகத் தன் தலையில் தானே குட்டிக் கொள்வாள்.



'என்ன நான்...! அந்த அளவா மான, ரோஷமற்றுப் போய் விட்டேன்! ஜெய்யால் அனுபவித்த துன்பங்கள் போதும். இனி என் வாழ்வில் காதலுக்கும் சரி... அதை விளைத்த ஜெய்யிற்கும் சரி... இடமேயில்லை!'

'நான் மன்னித்தாலும் சரி... மனோ எப்படி ஜெய்யை மன்னிப்பான்? அவன்... அவன் வயதில் பெற்றிருக்க வேண்டிய அன்பு, பாசம், அரவணைப்பு எல்லாவற்றையும் இழந்து விட்டு, காலம் கடந்த பின், நான்தானடா உன் அப்பா என்று வந்து நின்றால்...'

அதே சமயம்... உள்ளுக்குள் இருபத்தொரு வருடங்களாகக் குமைந்து கொண்டிருந்த கோபக் கனல் கொஞ்சமும் குறையாமல் கனன்றது.

'மனோவிடம் என்ன சொல்லி வளர்த்திருக்கிறாளோ அதுதான் இறுதியான முடிவு. எந்த நிலையிலும் அதிலிருந்து பின்வாங்கக்கூடாது.' – எண்ணிக் கொண்டாள்.

"என்னம்மா... என்ன யோசனை? ஜன்னல் வழியே அப்படி என்ன மெய்மறந்து பார்த்திட்டிருக்கீங்க? தூறல் போடுது... காய்ந்த துணிகளைக்கூட எடுக்காமல்..."

மனோவின் குரல் ஆதிரையை இவ்வுலகிற்கு இழுத்து வந்தது.

மனோ... இவளின் இருபத்தொரு வயது மகன். அந்த வீட்டின் ஒரே ஆண் சிங்கம்.

ஆதிரை இன்னமும் மூச்சு விட்டுக்கொண்டு உயிரோடு இருக்கிறாள் என்றால், அதற்கு ஒரே காரணம் மனோ.

# 18

**வா**சலில் காயப் போட்டிருந்த தன்னுடைய அம்மா வுடைய துணிகளை அள்ளியவாறே அம்மாவைச் சமீபித்தான், மனோ.

மனோவை அப்படி வளர்த்திருந்தாள் ஆதிரை.

பெண் பிள்ளைகளைக் கூப்பிட்டுக் கூப்பிட்டு இந்த வேலையைச் செய், அந்த வேலையைச் செய் என்றாலே சலித்துக் கொள்ளும் இந்தக் காலத்தில், தானாகவே பார்த்துப் பார்த்து, அம்மா சொல்ல வேண்டும் என்று வைத்துக் கொள்ளாமல், தானாகவே சின்னச் சின்ன வேலைகளை ஆதிரைக்குச் செய்து தருவான்.

"என்னம்மா... புதுசா அப்படிப் பார்க்கிறே? உன்கிட்டே ஒன்று சொல்லணும்... உள்ளே வா!"

அவனைத் தொடர்ந்து உள்ளே வந்தாள்.

வேறு என்ன புதுசாகச் சொல்லப் போகிறான்?

சின்னப் பிள்ளைகள் மாதிரி அன்று கல்லூரியில் நடந்தவற்றை, அபிநயத்துடன் சொல்லி, அவளைச் சிரிக்க வைத்துத் தானும் சிரிப்பான்.

இப்போது எண்ணிப் பார்த்தாலும், ஒன்றுமே இல்லாதது போலிருக்கும் விஷயத்திற்கும் அவனுடன் சேர்ந்து அர்த்த மற்றுச் சிரித்திருப்பாள்.

அதுதான் மனோவின் பலமே!

"என்ன மனோ! உன் கல்லூரியில் நடந்தவற்றை ஒப்பிக்கப் போகிறாயா?"



கேட்டவாறே அவனுக்குக் காபியும், மற்றொரு கையில் சிற்றுண்டியும் நீட்டியவள், என்றுமில்லாமல் மனோவின் முகம் படு சீரியஸாக இருப்பதைக் கண்டு குழம்பினாள்.

'என்னவாயிற்று இவனுக்கு?'

"அம்மா! சாரிம்மா!"

"சாரியா...? இப்போ எதுக்குடா சாரி கேட்கிறே... திடுதிப்புன்னு...!"

"இல்லைமா... காலையில் நான் முக்கியமாகக் காலேஜ் நோட்புக் ஒன்றைத் தேடிக் கொண்டிருக்கும் போது... அதிலேயும் அது காணோம் என்று டென்ஷனில் இருந்தேனா... அப்போது சாப்பிட்டுக் கொண்டே இருந் தாயே... என்று..."

"என்று என்னிடம் எரிந்து விழுந்தே... அவ்வளவு தானே... அதுக்கென்ன இப்போ?"

"இல்லேம்மா... சாரிம்மா... நீ இருந்த மனநிலை புரியாமல் உன்னிடம் நடந்து கொண்டு விட்டேன். ஏன்மா... நீயாவது நேற்றே என்னிடம் விஷயத்தைக் கூறியிருக்கக் கூடாதா?"

"என்ன விஷயம்?"

"தெரிந்தவுடன் எனக்கே ரொம்பக் கஷ்டமாகிவிட்டது அம்மா! நீ இருக்கும் மனநிலையைப் புரிந்து கொண்டேன். நைட்டுக்கு வேண்டுமானால் எதையும் சமைக்காதே! நான் உன்னை வெளியில் டின்னருக்குக் கூப்பிட்டுக் கொண்டு போகிறேன். உனக்கு நான் இருக்கேம்மா!"

மனோ சொல்லச் சொல்ல... ஆதிரை குழப்பத்தின் உச்சிக்குச் சென்றாள்.

என்ன... சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் சொல்கிறான் இவன்!

யாரையாவது பார்த்திருப்பானோ! ஜெய்... இருக்க முடியாதே! எங்கோ வெளிநாட்டில் வெளிநாட்டுக்காரியை மணந்து கொண்டு உல்லாசமாக இருப்பவருக்கு, இவர்கள் நினைவா வரப் போகிறது?

அதுவும்... தனக்கு இப்படி ஒரு மகன் இருப்பதே அவருக்குத் தெரியுமோ, என்னவோ!

யோசனையாய் மனோவை ஏறிட்டவளை, மனோவின் உதடுகள் மெல்ல மெல்ல உச்சரித்த வார்த்தைகள் தலை மேல் இடியாய் இறங்கின.

"என்னம்மா... நீ சொல்லாவிட்டால் தெரியாதா? இன்று அப்பாவின் நினைவு நாளென்று! அதனால்தான் காலையிலிருந்தே அப்செட்டாக இருந்தாயா? உனக்கு நான் இருக்கிறேன் அம்மா!"

தீயில்லாமல் நெருப்பில் வீழ்ந்தாள், ஆதிரை.

கீழே விழுந்து விடாமல் இருக்க, சட்டென மனோவைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

## 19

அதிர்ச்சியின் விளிம்பில் உறைந்து நின்றாள், ஆதிரை.

என்ன சொல்கிறான், இவன்?



'அப்பாவின் நினைவு நாள் என்றா?'

'மூடடா... உன் அப்பா எங்கேடா இறந்தார்? கல் போன்று உன் தாயை மறந்து வாழ்பவரை அறிவாயா நீ?'

ஆனால் அப்படி யெல்லாம் கூற முடியவில்லை... கதற முடியவில்லை அவளால்.

வியர்வை முத்துகள் நெற்றியில் உற்பத்தியாகி, அவள் அணிந்திருந்த காட்டன் புடவையை நனைத்தன.

மெல்ல மனோவைத் தன் பிடியிலிருந்து விடுவித்தவள், ஒன்றும் சொல்லாமல் மெல்ல நகர்ந்தாள்.

சுயநினைவுக்கு எப்படி அடியெடுத்து வைத்தாளோ, சோபாவில் அமர்ந்தாளோ... அவளுக்கே புரியவில்லை.

ஆனால், மனம் ஓலமிட்டதையெல்லாம் அவளால் மகனிடம் கூற முடியவில்லை.

எப்படிக் கூறுவாள்? அப்பா இறந்து விட்டார் என்று அவனிடம் கூறியல்லவா அவனை இது நாள்வரை வளர்த்திருக்கிறாள்.

உயிரோடு இருப்பவர் என்றேனும் ஒரு நாள் மாளலாம்.

ஆனால், என்றோ உன் அப்பா இறந்து விட்டார்... உனக்கு நான், எனக்கு நீ மட்டுமே என்று சொல்லிவிட்டு, அவர் ஏதோவொரு தேசத்தில் எவளோ ஒருத்தியோடு வாழ்கிறார் என்று எப்படிக் கூறுவாள்?

நெஞ்சை யடைத்தது ஆதிரைக்கு.

மெல்லப் பக்கத்திலிருந்த பாட்டிலிலிருந்து தண்ணீரை வாயில் சரித்துக் கொண்டாள்.

சிறு வயதில் மனோ, 'அப்பா... அப்பா...' என்றெல்லாம் மழலையில் பிதற்றும் போதெல்லாம், "அப்பா ஊருக்கு... நாளைக்கு வருவார்!" என்று அவன் மழலையிலேயே சொல்லி, கொஞ்சிச் சமாளிக்க முயன்ற ஆதிரையால், அவன் வளர, வளர... வெகுநாளைக்கு இப்படிச் சமாளிக்க முடியாது என்று புரிந்து விட்டது.

மனோ... பள்ளியில் நல்ல ராங்க் எடுத்துக்கொண்டு... 'அம்மா...' என்று ஓடி வரும் போதும்... போட்டியில் கை நிறையப் பரிசுகளை அள்ளி வரும் போதும்... அப்பாவைக் கேட்டு நச்சரிக்கத் தவறவில்லை.

"அப்படி எந்த ஊருக்கு அப்பா போயிருக்கார், சொல்! சைலேஷ் அப்பா கூட துபாய்ல இருக்கார் இல்லே... அவர் இரண்டு வருஷத்துக்கு ஒருமுறை இவனைப் பார்க்க வந்து விடுவார் தெரியுமா? சைலேஷ் எங்களுக்கெல்லாம் கைநிறைய சாக்லேட் கொண்டு வந்து தருவான்.

"தரணி கூட... இந்த லீவுக்கு அப்பாவைப் பார்க்க யு.எஸ். போகப் போகிறானாம். என் அப்பாவும் வெளியூரில் தான் இருக்கிறார் என்று சொன்னால், ஒருத்தனுமே நம்ப மாட்டேன் என்கிறார்கள் அம்மா! 'அப்படி நம்பணும்னா... எந்த ஊரில் இருக்கார், சொல்லு... ஒரே ஒரு தடவையாவது ஆண்டு விழாவிற்கு வந்திருக்கிறாரா?' என்று மடக்கு கிறார்கள் அம்மா!"

சற்றுப் பேசுவதை நிறுத்தி, ஆசுவாசப் படுத்திக் கொண்டவன், மெல்லத் தழுதழுக்கும் குரலில் அம்மாவின் மோவாயைப் பிடித்திழுத்து வினவினான்.



"ஏம்மா... அப்பாவை இந்த வருஷம் ஆண்டு விழாவிற்காவது வரச் சொல்லுங்கம்மா! நீங்க போன் பண்ணிக் கொடுங்க. நான் பேசுகிறேன். மனோ சொன்னால், உன்னை மாதிரியே அப்பாவும் தட்ட மாட்டார். ஏன்மா... அப்பாவுக்கு வேலையை விட நான்தானேம்மா பெரிது... முக்கியம்!"

கெஞ்சும், கொஞ்சும் மனோவைப் பார்க்கும் திறனற்று... அவன் பிஞ்சுக் கரங்களை மெல்ல நகர்த்தி... பார்வையை மெல்ல வேறு புறம் திருப்பிக் கொள்ள அப்போது முடிந்ததே தவிர, மனோவின் கேள்விகள் ஈட்டியாய் மாறி, அவள் இதயத்தைப் பதம் பார்ப்பதை அவளால் புறக்கணிக்க முடியவில்லை.

நாளை விடியும்போது, அன்னையிடமிருந்து நல்ல சந்தோஷமான பதிலை எதிர்பார்த்துக் கொண்டு உறங்கிக் கொண்டிருக்கும் மனோவிற்கு என்ன பதிலைச் சொல்லப் போகிறாள்?

## 20

"கண்ணா... ராஜா... மனோ...!"

"என்னம்மா?"

"அம்மா இப்போ... இதுவரை உன்கிட்டேயிருந்து மறைச்சு வைச்சிருக்கிற உண்மையைக் கூறப் போறேன். என்னை மன்னிச்சிடுடா...!"

என்று ஆரம்பித்து, தன் கணவன் ஜெய், அவன் வயிற்றில் இருக்கும்போதே இறந்து விட்டதாகவும், இதுவரை அவனை அரும்பாடு பட்டு வளர்த்த அவளே... மனோவிற்கு

எல்லாமும் என்று நாத் தழுதழுக்கக் கூறியபோது, குழந்தை சமர்த்தாக நம்பிக் கண்ணீர் விட்டது.

இதுவும் ஒரு விதத்தில் உண்மைதானே! இவள் வரையில் கணவன் இறந்துதானே போய்விட்டான்.

இவள் மனசை விட்டுப் போய்விட்டான்.

இவள் உணர்வுகளைச் சாகடித்து விட்டுப் போய் விட்டான்.

எண்ணங்கள் ஆதிரையின் மனதில் வட்டமிட... திடுமென ஒரு கேள்வி புறப்பட்டு ஆதிரையைத் தாக்கியது.

என்றுமில்லாமல் அவனை... மனோவை எது அப்படிச் சொல்லத் தூண்டியது...?

எதைப் பார்த்து, அல்லது எதைக் கேள்விப்பட்டு மனோ அப்படிச் சொன்னான்?

இதற்குள் மழை வலுத்திருக்க, மனோ மெல்ல எழுந்து போய் ஜன்னலைத் தாழ் போட்டு, கொக்கி போட்டு விட்டு வந்தான்.

அம்மாவின் தோற்றம் கவலையை அளிக்க, அவளை உலுக்கினான்.

"என்னம்மா... ஏதேனும் தப்பாகச் சொல்லிவிட்டேனா?"

"இல்லைப்பா! ஆமாம் மனோ... உனக்கு எப்படி...?"

"இதோ... இதைப் பாரம்மா! நீ கூடச் சொல்லாத விஷயத்தை இப்படித்தான் தெரிந்து கொண்டேன். அன்று அழுதபடி நீ அப்பாவின் போட்டோவைக் காட்டி விஷயத்தைக் கூறினாயே... அந்த அப்பாவின் முகம்



அப்படியே... சின்ன வயதிலேயே என் மனதில் பதிந்து போய் விட்டது. அம்மா... இங்கே பார் அம்மா!"

தனது அறையிலிருந்து, அந்தத் தமிழ் நாளிதழை எடுத்துக் கொண்டு வந்து... மனோ காண்பித்தான். அன்றைய தினசரி அது.

நினைவஞ்சலி பிரிவில்... ஜெய்யின் போட்டோவைப் போட்டு... பிரிவால் வாடும்... கண்களை உன்னிப்பாக்கி... எழுதியிருந்தவற்றைப் படித்தாள்.

இது... ஜெய்யின் தந்தை பெயரல்லவா? ஊழியர்கள் என்று போட்டு, 'ஜெய் சூப்பர் மார்க்கெட்', 'ஜெய் பழமுதிர் சோலை', 'ஜெய் ஆட்டோமொபைல்ஸ்', 'ஜெய் டிராவல்ஸ்' என்று நீண்டது பட்டியல்.

ஆதிரைக்குக் காலடியில் பூமி நழுவுவது போல் இருந்தது.

'என்ன... ஜெய்க்கு நினைவஞ்சலியா... எப்படி? ஜெய்யின் அப்பாவிற்கு என்ன பித்துப் பிடித்து விட்டதா?'

'உயிரோடு இருக்கும் மகனுக்கு நினைவஞ்சலி செலுத்த...'

ஜெய் வீட்டின் வாசலிலேயே பழியாகக் கிடந்தவளை... அரை நாள் காக்க விட்டு... பின் ஜெய்யின் துரோகச் செயலைக் கூறிப் புழுவாய்த் துடிக்க விட்டவரல்லவா அவள் மாமனார்!

எப்படி மறப்பாள், அந்த நாளை!

சட்டென, மூளை உஷாராயிற்று! ஒரு வேளை சமீபத்தில் ஜெய்க்கு ஏதாவது...?

அவசர அவசரமாக... மனோவின் கையிலிருந்த நாளிதழைப் பிடுங்கி... இறந்த நாள் என்று குறிப்பிட்டிருந்த தேதியைப் பார்த்தாள்.

கையிலிருந்த பேப்பர் நழுவியது.

05.05.1990. கைகள் நடுங்கின.

மறக்க முடியுமா... அந்த நாளை!

ஜெய்... வாக்கிங் போனவர் காணோமே என்று பரிதவித்து, பின் யோசித்து, அவனுடைய நண்பன் ராகேஷைத் தொடர்பு கொண்ட போதல்லவா தெரிந்தது.

ஹோட்டலிலிருந்து இரண்டாவது கிலோ மீட்டரில் ஜெய் ஆக்சிடெண்ட் ஆகி... லாரியில் அடிபட்டு மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டு விட்டான். இவ போவதற்குள்...

மருத்துவமனையில் ஓரளவு தேறி... வெளிநாட்டிற்கு சிகிச்சைக்கு...

அப்படியிருக்க... எப்படி இறந்த நாளென்று...!

## 21

அதே நேரம்...

மதுரையில், 'ஜெகன் இல்லம்' என்ற மார்பிள் பதிக்கப்பட்டு முகப்பு கூறிய அந்தப் பிரமாண்ட இல்லத்தில், தோற்றத் தில்தான் பிரமாண்டம் இருந்ததே யொழிய, வீடு இருள் அடைந்து போய் விட்டது.



விஸ்தாரமான கூடத்தில்... ஒரு புறம் ஜெய் போட்டோவில் சிரித்துக் கொண்டிருக்க, மறுபுறம் அவனது தாய்... போட்டியாகத் தானும் போட்டோவில் இருந்தாள்.

புத்திர சோகம் இவ்வளவு கொடியது என்று வேறு யாரும் சொல்லியிருந்தால் ராஜதுரை சத்தியமாக நம்பி யிருக்க மாட்டார்.

ஆனால், ஜெய்யின் இழப்பு... அவரை மனதளவில் அடித்துப் போட்டு வெகு வருடங்களாகி விட்டன.

வாலிபம் இருந்தபோது - ஜெய்யின் இழப்பு ஈடு செய்ய முடியாததாக மனம் ரணப்படுத்தினாலும், அவருடைய பிசினஸ் நடவடிக்கைகளினால், அவரது துக்கம் மட்டுப் பட்டிருந்தது.

ஜெய்யின் திருமணச் செய்தி தன் காதுகளை எட்டியதும், தாம்தூம் எனச் சராசரித் தகப்பனைப் போல் குதித்தவர்தான் ராஜதுரை. அவனை வீட்டிற்குள் விட்டேனா பார்... என்று கறுவியவர்தான்.

ஆனால்... அவன் ஆக்ஸிடென்ட்டில் மாட்டிக் குற்றுயிரும், கொலையுயிருமாகக் கொண்டு வரப்பட்ட போது... மகனின் தவறெல்லாம் மறந்தது.

மகன் சாகக் கிடக்கிறான் என்ற ஒன்றைத் தவிர, வேறு ஒன்றுமே மனதில் பதியாமல் போனது.

ஜெய்யின் தாயோ... உடனே சுவரைப் பிடித்தவாறு மயக்கமானவள்தான்! அவனுக்கு ஒரு புறம் சிகிச்சை துவங்கியது.

ஆனால், அந்த இக்கட்டான நிலைமையிலும் மகள் தனக்கு உயிரோடு கிடைப்பானா என்பதே கேள்விக்குறி யாகியிருந்த நிலைமையிலும், ராஜதுரையின் வியாபார புத்தி சகுனித்தனமாய் யோசிக்கத் துவங்கியது வியப்புதான்.

தன் குயுக்தியான யோசனையைச் செயல்படுத்த மளமளவென நடவடிக்கையில் இறங்கினார் அவர்.

இன்று... தனது முட்டாள்தனத்தை எண்ணித் தாமே வருந்தாத நாளில்லை.

நினைவஞ்சலி வெளியிடப்பட்டிருந்த தினசரியைக் கையில் வைத்துக் கொண்டு, எதையுமே யோசிக்க முடியாத மனநிலையில் இருந்தவரை, அவர் பி.ஏ. இளங்குமரனின் குரல் உலுக்கியது.

"சார்... டாக்டர் வரார் சார்!"

வரவேற்க அவசியமின்றித் தோரணையாக உள்ளே நுழைந்து, சோபாவில் அமர்ந்தார் குடும்ப டாக்டர் பஞ்ச நதீஸ்வரன்.

அது வழக்கமான செக்கப் என்பதால், எதுவும் பேசாமல், ராஜதுரை கையை நீட்ட, ரத்த அழுத்தத்தைப் பரிசோதிக்கத் துவங்கினார்.

அவர் புருவம் தன்னிச்சையாக உயர்ந்தது.

"வாட்! என்ன ராஜதுரை? பிபி இவ்வளவு உயர்ந் திருக்கு! மாத்திரை ஒழுங்காச் சாப்பிடறீங்களா, இல்லையா?"

கேள்வியை ராஜதுரையிடம் கேட்டவர், பதிலை இளங்குமரனிடம் எதிர்பார்த்து அவன் முகத்தை நோக்கினார்.



அதற்குக் காரணம் இல்லாமலில்லை.

இளங்குமரன், அவருக்கு பிசினஸைப் பொறுத்த வரை பி.ஏ. என்று பெயரே தவிர, ராஜதுரையின் சம்சாரமும் தவறிப் போனபின்...

அவருடைய உடல் நலன், வீட்டு நலன் என, எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டு சகலத்திற்கும் பி.ஏ.வாகிப் போனான்.

"மாத்திரை ஒழுங்காகச் சாப்பிடுறார் டாக்டர் சார்! ஆனால், ஜெய் சாரின் நினைவு தினம் வந்தாலே இப்படித்தான்.

"கையில் அவர் போட்டோவை வைத்துக் கொண்டு... அதையே பார்த்துக் கொண்டு மனம் வருத்தப்பட்டுக் கொண்டிருப்பதால், பி.பி. ஏறியிருக்கிறது.

"சார் ஆபீஸ் போயே இரண்டு நாட்களாகின்றன."

தன் மனக் குமுறலைக் கொட்டித் தீர்க்க ஆள் கிடைத்த சந்தோஷத்தில், இளங்குமரன் ராஜதுரையைப் பற்றிக் கூறுகிறான்.

படித்த படிப்பிற்குச் சரியான வேலை கிடைக்காமல், ஜெய் இண்டஸ்ட்ரீஸின் காலியான ஒரு போஸ்ட்டிற்கு இன்டர்வியூவிற்கு வந்து பத்தோடு பதினொன்றாக அமர்ந் திருந்தவன்தான் இளங்குமரன்.

'ஆபீஸோட ஷோக்கைப் பார்த்தாலே தெரியுது. இங்கேயெல்லாம் வேலை கிடைக்குமா?'

'பெரிய இடத்துச் சிபாரிசு இருந்தாத்தான்பா இங்கே யெல்லாம் வேலை கிடைக்கும்!'

'இளிச்சவாயனாட்டம் நாம் இங்கே இன்டர்வியூ அட்டென்ட் செய்வோம்... எவனாவது ஒரு பெரிய தொழிலதிபரோ, அமைச்சரோ போன் செய்து, அதிலேயே அப்பாயிண்ட்மெண்ட்டை முடிச்சுக்குவான் பாரேன்!'

'நீயாவது பரவாயில்லை, இது ஒன்பதாவது இன்டர்வியூ... எனக்கிது பத்தொன்பதாவது...'

இப்படி அங்கே அமர்ந்திருந்த முப்பது பேரும் தங்களுக்குள், தமக்கே அந்தப் போஸ்ட் கிடைக்க வேண்டும் என்ற நப்பாசையோடும், அதிகபட்ச நம்பிக்கையோடும், மனதில் கனவோடும், வெளியில் அநாவசியப் பந்தாவோடும் வார்த்தைகளை விரையம் செய்து கொண்டிருந்தனர்.

ஆனால், அவர்களுக்குத் தெரிந்திருக்க நியாய மில்லை. அந்த ரூமில் வைக்கப்பட்டிருந்த மைக்ரோ போன் மூலமாக அவர்களின் மன விசாரங்கள் உடனுக்குடன் அடுத்த அறையில் இருந்த எம்.டி. காதுகளில் விழுந்து கொண்டிருந்தது.

அடுத்த பத்தாவது நிமிஷம் அந்த ரூமில் இருந்த ஸ்பீக்கர் விழித்துக் கொண்டு குரல் கொடுக்க, இன்டர்வியூ பற்றின தகவலை எதிர்பார்த்து, நிமிர்ந்து உட்கார்ந்த மக்கள்...

இதுவரை தாங்கள் பேசிக்கொண்டது ஸ்பீக்கரின் வாயிலிருந்து கொட்டத் துவங்கத் திடுக்கிட்டார்கள்.

தலை தானாகக் கவிழத் துவங்கியது.

முகத்தில் ஈயாடவில்லை.



அவை முடிந்த போது தாங்களே ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளத் தயங்கினர்.

அறிவிப்பு வெளியானது.

இந்த நேர்முகத் தேர்வு நியாயமானபடி நடக்கப் போகிறது என்ற நம்பிக்கையில்லாத யாரும் இதில் கலந்து கொள்ள அவசியமில்லை. அத்தகைய ஊழியர்கள் இக் கம்பெனிக்குத் தேவையுமில்லை. எனவே, விருப்ப மில்லையென்பவர்கள் இப்போதுகூட விலகிக் கொள்ளலாம். வந்து விட்டதற்கான பயணச் செலவாக ரூபாய் இருநூறு ரிசப்ஷனில் பெற்றுக் கொண்டு செல்லலாம். விருப்ப முள்ளவர்கள் மட்டும் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப் படுவர்.

முகத்தில் ஈயாடாமல், வந்த வழியே நிறையப் பேர் நடையைக் கட்டினர்.

ஆனாலும், ராஜதுரைக்கு நம்பிக்கை இருந்தது.

தான் அந்த ரூமைத் தாண்டித் தன் அறைக்குள் வரும் சமயம், அன்றைய தினசரியில் இருந்து ஏதாவது நேர்முகத் தேர்வில் கேட்கப்படலாமோ என்ற சந்தேகத்தில் தினசரியை அவசரமாகப் புரட்டிக் கொண்டிருந்த அந்தப் பட்டதாரி இளைஞன் கண்ணில் பட்டிருந்தான்.

யாருடைய பேச்சிலும் கலந்து கொள்ளாமல் தனித் திருந்தான்.

இந்த வேலை தனக்கு மிகவும் அவசியம் என்பதை உணர்ந்தும் வீண் பந்தா இல்லாத தோற்றம்.

அவனாவது கடைசியில் மிஞ்சி இருந்திருப்பான் என்ற அவரது கணிப்பு பொய்க்கவில்லை.

நேர்முகத் தேர்விலேயே இளங்குமரனை மிகவும் பிடித்துப் போய்விட்டது, ராஜதுரைக்கு.

அப்படி அவர் கண்டெடுத்த மாணிக்கம்தான், அவன்.

டாக்டரிடம் அவன் கூறியவற்றைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தவரின் கண்களில் கோபம் இல்லை.

தனக்காக வருந்தும் அவனுடைய பாசம் மனதைத் தொட்டது.

## 22

பஞ்சநதீஸ்வரன் பரிதாபமாக ராஜ துரையை ஏறிட்டார்.

"இதோ பாருங்க துரை... இன்னமும் எத்தனை வருடங்களுக்குத்தான் இப்படி நடந்ததையே நினைத்து வருத்தப்பட்டுக்கிட்டு இருப்பீங்க? நமக்குக் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்.'

கொஞ்சம் இடைவெளி விட்டுத் தொடர்ந்தார், டாக்டர்.

"இப்போ நம்ம கம்பெனிகள் அத்தனையிலும் சேர்த்து எத்தனை தொழிலாளர்கள் உங்களை நம்பி இருக்காங்க... எத்தனை குடும்பங்கள்! அத்தனை பேருக்கும் இயன்ற அளவு நல்லது செய்யப் பாருங்க... உங்க துக்கம் கரையும்!"

"ஆனா... டாக்டர்... எனக்குன்னு யாரும் இல்லையே! இத்தனை சொத்திற்கும் வாரிசு யாருமில்லையே!"



நாத்தழுதழுக்க... இறந்த மகனின் போட்டோவையே வெறித்தார்.

"நான் உங்களுக்கு ஒரு வேலை கொடுத்தேனே, நினைவிருக்கிறதா?"

"நினைவில்லாமல் என்ன துரை? ஆனால், நம்ம ஜெய்க்கு ஒரு மகன் இருக்கிறான் என்று இன்னமும் நம்பு கிறீர்களா?"

"நம்ம தணிகை ஆணித்தரமாகச் சொல்றானே... ஒரு மாசம் இருக்குமா? இருக்கும்...! சிக்னலில் பாதசாரிகள் சாலையைக் கடக்க சிக்னல் போட்டிருந்தபோது... அந்தப் பெண்ணையும்... வாலிப வயதில் அவள் பையனையும் பார்த்திருக்கிறான்.

"ஏற்கெனவே ஜெய் காதல் விவகாரம் அரசல் புரச லாகத் தணிகைக்குத் தெரியுமென்பதால், தணிகை அந்தப் பெண்ணை அடையாளம் கண்டு கொண்டு விட்டான். பார்த்தால்... கூட அவள் மகன்! 'அப்படியே சின்னய்யாவை உரிச்சு வெச்சிருக்கய்யா...!' என்று சொல்லிச் சொல்லி மாய்ந்து போனான்!"

தணிகை அவருடைய கார் டிரைவர்.

ராஜதுரை தனக்குத் திருமணமானவுடன் முதன் முதலில் கார் வாங்கிய போதிலிருந்து, ராஜதுரையிடம் கார் டிரைவராக உழைத்துக் கொண்டிருப்பவர்.

"தணிகை முயற்சி செய்த போதும், அவளையோ அந்தப் பையனையோ டிரேஸ் பண்ண முடியவில்லை, இல்லையா?"

"ஆமாம் டாக்டர்! சிக்னல் விழுந்து காரைக் கிளப்புவதற்குள், அவர்கள் சிக்னலில் நின்றிருந்த ஏதோ வொரு பஸ்ஸில் ஏறியிருக்க வேண்டும். எவ்வளவு தேடியும்... கண்டுபிடிக்க முடியவில்லை!"

விட்டால் தேம்பித் தேம்பி அழுதுவிடுவார் போல் இருந்தது, ராஜதுரையைப் பார்ப்பதற்கு!

'எந்த முகத்தை வைத்துக் கொண்டு மருமகளைப் பார்ப்பேன்?'

'இன்று யாருமில்லாமல், பணமிருந்தும் அனாதை போலானபிறகு... ஆனால், அன்று?'

'அன்று... இரக்கமில்லாமல் எப்படி நடந்து கொண்டேன்?'

'அன்றே... என் மகனால் மனைவியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர்களுக்குள் எல்லாம் முடிந்து... பேரனைச் சுமந்திருக்கிறாள் என்று தெரிந்திருந்தால்... அப்படித் துரத்தியிருக்க மாட்டேனோ?'

'விதி... இப்படிக் குடும்ப ரத்தத்தைச் சேரவிடாமல் பிரித்துப் பார்க்க முடிவு செய்திருக்கும்போது, மதி வேலை செய்யாது விதிக்குத் துணையாகப் போனதில் ஆச்சரியமில்லையே...!'

"இங்கே பாருங்க ராஜதுரை...! உங்களையும், உங்கள் வம்சமான பேரப் பிள்ளையையும் பிரித்த விதியே... அவனை உங்களிடம் கொண்டு வந்து சேர்க்கும். அதுவரை நீங்கள் பொறுமையாக இருந்துதான் ஆக வேண்டும். இதே டயட்.. மாத்திரைகளைக் கண்டினியூ பண்ணுங்க. குறிப்பா... இரத்த அழுத்தம் ஏறாமப் பார்த்துக்கணும்."



மேலும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு, டாக்டர் விடைபெற்றுச் சென்றுவிட்டார்.

இளங்குமரனோ... தன் தகுதியை மீறி அய்யாவிற்கு ஆறுதல் கூறுவதா என்று புரியாமல்... அப்படியே விட்டு விட்டுப் போகவும் மனம் இடம் கொடாமல் வாளாயிருந்தான்.

"குமரா...!"

"அய்யா!"

"ஜெய்யோட நண்பன் ராகேஷை... உடனடியாக என்னை வந்து பார்க்கச் சொல்!"

'சரி'யென்று இளங்குமரன் தலையாட்ட... யோசனை யினூடே தன் அறைக்கு எழுந்து சென்றார் ராஜதுரை.

## 23

**ரா**கேஷின் கண்கள் கலங்கி யிருக்க... அவன் நினைவெல்லாம் நண்பன் ஜெய்யைப் பற்றியே சுற்றிக் கொண்டிருந்தது.

அலுவலகத்திலும் வேலை ஓடவில்லை.

சரி... கான்டீன் வரை சென்று டீயாவது குடித்துவிட்டு வரலாம் என்று கிளம்பினான்.

மனம் முழுக்க... பேப்பரில் ஜெய்யின் தந்தை கொடுத்திருந்த நினைவஞ்சலியைச் சுற்றியே வந்தது.

'ச்சே! என்ன மடத்தனம் செய்து விட்டேன்!'

அண்ணனாக அல்லவா...

'என்னைத் தன் சொந்த அண்ணனாக அல்லவா... ஜெய்யின் மனைவி... அதுதான் அந்தப் பெண் ஆதிரை நினைத்திருந்தாள்.

ஏற்கெனவே ஜெய்யின் இழப்பு அவளுக்கு ஈடு செய்ய முடியாத ஒன்று!

அதிலும்... தன்னால்... இப்போது நினைத்தாலும் கூட, தன்னால் எப்படி ஜெய்க்கு அப்படி ஒரு துரோகம் பண்ண முடிந்ததென்று மனம் அடித்துக் கொள்ளும்.'

'எல்லாம் ஜெய்யின் அப்பாவின் சாமர்த்தியப் பேச்சால்... தன் அந்தஸ்தை விட்டு இறங்கி வந்து... குடும்ப மானம்... அது இதுவென்று பேசிய பேச்சில் கரைந்து விட்டேனே!'

மனம் குமைய... நடுக்கத்தை மறைக்க... தன்னையும் அறியாமல் சிகரெட் ஒன்றை வாங்கிப் பற்ற வைத்துக் கொண்டான்.

அன்று நடந்தவை மனதிற்குள் ஓட ஆரம்பித்தன. இருபத்தொரு ஆண்டுகள் இருக்குமா? இருக்கும்.

அன்று காலை... திடீரெனக் கைபேசி அழைக்க... செவிமடுத்தவன் அதிர்ந்து போனான்.

ஜெய்க்கு விபத்தா? அதுவும் இரண்டு நாட்கள் முன்பு திருமணமானவன்.

அலறி அடித்துக் கொண்டு மருத்துவ மனைக்கு ஓடினான்.

முதலில் ஐ.சி.யு.வில் இருப்பதால், பார்க்க முடியாது என்று கூறிவிட்டனர்.



கையலக் கண்ணாடிச் சதுரம் வழியே ஜெய்யைப் பார்த்தபோது, வயிறு பிசைந்தது.

மற்ற நண்பர்களுடன் இது பற்றி உரையாடிக் கொண்டிருக்கையிலேயே, இடி போன்ற அச்செய்தி நர்ஸ் மூலம் வந்தடைந்தது.

ஆமாம்... சிகிச்சை பலனளிக்காமல்...

ஜெய் இறந்து விட்டான்.

ஜெய்யின் அம்மா ஒரு புறம் கதற, அப்பா ஒருபுறம் உடல் குலுங்க, நண்பர்கள் செய்வதறியாது திகைத்தனர்.

அவர்கள் வட்டத்திலேயே... யாருக்கு எந்த ஒன்றென்றாலும், களத்தில் இறங்கி, ஆளுக்கு ஒரு உத்தரவு போட்டு... பணத்தை இறைத்து... எவ்வளவு இக்கட்டையும் சமாளிப்பவன் ஜெய் ஒருத்தன்தான்!

இப்போது அவனையே வாரிக் கொடுத்து விட்டு நிற்கிறோமே! கண்கலங்கினர், நண்பர்கள்!

மதுரையில்... அங்கே எங்கே போய்... விபத்தில் மாட்டிக் கொண்டான்... என்று விழித்த ராஜதுரைக்கோ, ஜெய்யின் அம்மாவிற்கோ ஜெய்யின் திருமணம் பற்றித் தெரிய வெகு நேரமாகவில்லை!

ஏற்கெனவே அரசல்புரசலாக ஜெய்யின் தாய் அறிந்திருந்தாள்தான்.

ஆனால், மகனிருந்த நிலைமையில், அவன் மீது கோபம் கொள்ளவோ, அவனாகவே செய்து கொண்ட திருமணம் பற்றி யோசிக்கவோகூட நேரமிருக்கவில்லை.

ஜெய்யை அள்ளிப் போட்டுக் கொண்டு, மருத்துவ மனைக்கு விரைவதையும், அவனை எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டுமே என்ற தவிப்பையும் தவிர... வேறெதுவும் யாருக்குமே தோன்றியிருக்கவில்லை.

ஜெய் விபத்திற்குள்ளானபோது... அங்கே ஜெய்யின் செல்போனும் இல்லை. திருட்டுப் போயிற்றா அல்லது அவன் எடுத்து வரவில்லையா என்றும் தெரியவில்லை.

நல்ல வேளையாகச் சட்டைப் பையில் அவனது விசிட்டிங் கார்டு வீட்டு விலாசத்தடன் இருந்ததால், போலீஸ் உடனே தகவல் தந்து விட்டனர், வீட்டிற்கு!

ஆனால் ஜெய்யின் மறைவை... தாயை விட முதலில் ஜீரணித்துக் கொஞ்சம் போலச் சுதாரித்துக் கொண்டவர் ராஜதுரைதான்.

அவ்வளவு அவலத்திலும் அவரைச் சட்டென நிலைகுலையச் செய்தது... ஜெய்யின் புது மனைவி... அந்தப் பெண்... அந்தப் புதுப் பந்தம் பற்றிய உண்மையான நிலைமை! அவரது வியாபாரப் புத்தி விழித்துக் கொண்டது.

அந்தப் பெண்... பெயரென்ன... அவன் நண்பர்கள் கூறினார்களே... ஆதிரையாமே... அவள் அங்கே ஹோட்டல் அறையில் ஜெய்க்காகக் காத்துக் கொண்டிருப்பாள்.

அவள் தங்கியிருந்ததாக ராகேஷ் சொல்லும் ஹோட்டல்... ஒரு இரண்டு கிலோ மீட்டர் தள்ளி இருப்பதால் அந்தப் பெண்ணிற்கு நடந்தது தெரிய வந்திருக்க வாய்ப்பில்லை.

ஒரு நிமிடம் நினைத்துப் பார்த்தார், ராஜதுரை.



## 24

அந்தப் பெண் ஆதிரை... வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டு... மருத்துவ மனைக்கோ அல்லது... ஜெய்யின் உடல் எடுத்துச் சென்றபின், வீட்டிற்கோ வந்து... ஒப்பாரி வைத்து அழ ஆரம்பித்தால், ஊரார் வாய்க்கு அவலாகி விடாதா, அது.

'மிஸ்டர் ராஜதுரை... யாரிந்தப் பெண்? ஜெய்யின் மனைவி என்கிறாளே... ஜெய்க்கு எப்போது திருமணம் ஆயிற்று?' என்று தன் வியாபார நண்பர்கள் கேட்கும்போது, தலைகுனிய நேரிட்டால், அதோடு தன் குடும்ப மானமும் அல்லவா தலைகுனிய நேரிடும்.

ஜெய்யின் அம்மா... ஏற்கெனவே அந்தப் பெண்ணின் தாலிதான் ஜெய்யின் உயிரைப் பறித்து விட்டது என்று புலம்பிக் கொண்டிருப்பவள், அவளைப் பார்த்ததும்... பைத்தியமே ஆனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அந்தப் பெண்ணை அப்படியே அப்புறப்படுத்த வேண்டுமென்று நினைத்தார், அவர்.

ராஜதுரை அப்படி நினைத்ததற்குக் காரணம் இல்லாமலில்லை.

ஒரு வேளை ஆதிரை, ஜெய்யைக் காதலித்து மணந்ததற்கு... அவனது பணக்காரப் பின்னணிதான் காரணம் என்றிருந்தால், அவன் இப்போது இறந்து விட்ட நிலையில், அவனது சடலத்தை வைத்துக் கொண்டு உரிமை கொண்டாடிப் பிரச்சனை செய்தால்... தன்னை மருமகளாக ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும் என்று நிர்ப்பந்தித்தால்...

விதவிதமாக அவரது எண்ண அலைகள் விரிந்தன.

மகன்... மரித்து... வீட்டிற்கு எடுத்துப் போகக் காத்திருக்கும் போது, உலகிலேயே எந்த ஒரு தகப்பனுக்கும் இப்படி ஒரு யோசனையில் புத்தி போகாதுதான்.

ஆனால், பணக்காரப் புத்தி அவ்வாறு யோசிக்க வைத்தது.

சட்டென ஒரு முடிவிற்கு வந்தார்.

'ஜெய் இறந்ததே அவளுக்குத் தெரியாவிட்டால்...'

'ஜெய் இறந்தது தெரிந்தால்தானே!'

முடிவுடன், மகனின் நெருங்கிய நண்பனான ராகேஷை அழைத்தார்.

ஜெய்யை... பங்களாவிற்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்துவிட்டு, ராகேஷிடம் நிமிர்ந்தார்.

அவர் சொல்லச் சொல்ல... என்ன இது, அநியாயம்... என ராகேஷிற்கு மனம் பதைத்தது.

இருவரையும் சேர்ந்து வாழத்தான் விதி விடவில்லை.

ஜெய்யின் உடலைப் பார்த்துக் கதறியழக் கூடவா அந்தப் பெண்ணிற்குக் கொடுத்து வைக்கவில்லை!

ஆனாலும் தன் குடும்ப மானம், அந்தஸ்து காற்றில் பறக்காமல் இருக்க, நீதான் உதவ வேண்டும் என்று கையைப் பிடித்து, வயதில் பெரியவர் ராஜதுரை வேண்டும் போது, பதில் சொல்லத் தெரியவில்லை.

'உன் நண்பன் அவப் பெயரோடு கட்டையேற வேண்டுமா? அதைத்தான் விரும்புகிறாயா?' என்று



ஆரம்பித்து, ராகேஷை மூளைச் சலவை செய்துவிட... அவர் சொல்வதுகூடச் சரிதானோ என்று அவனுக்கே தோன்ற ஆரம்பித்து விட்டது துரதிர்ஷ்டம்தான்!

ராஜதுரை சொல்வது போலவே செய்து விடுவதாக வாக்களித்து, அவன் திரும்புவதற்குள் அவன் செல்போன் ஒலித்தது.

அழைத்தது, ஜெய்யின் செல்போனிலிருந்து.

அழைத்தது, அவன் நினைத்தது போல, ஆதிரையே தான்.

தனியாகப் போய்ப் பேசியவன் சொன்ன செய்தியைக் கேட்டு...

துடித்துப் போனாள் ஆதிரை.

## 25

"என்ன அண்ணா சொல்றீங்க? விபத்தா...? ஜெய்க்கா...? ஐயோ... நான் என்ன செய்வேன்? வாக்கிங் போனவர் வருவாருன்னு இங்கே பைத்தியமாட்டம் வெயிட் பண்ணிக்கிட்டு இருக்கேனே! அவருக்கு ஆபத்து ஒன்றுமில்லையே!"

கேள்விகளை அடுக்கினாள் ஆதிரை.

"அதெல்லாம் ஒன்னுமில்லை... தலையில் லேசான காயம்... அவ்வளவுதான். நீ ஒன்னும் கவலைப்படாதேம்மா!"

"எனக்கு உடனே ஜெய்யைப் பார்க்கணும் போல் இருக்கு! கூட்டிட்டுப் போறீங்களா?"

"நீ ஹோட்டல்லயே இரும்மா. நான் உடனே அங்கே வர்றேன்!"

பதைபதைப்புடன் காத்திருந்த ஆதிரையை பைக்கில் ஏற்றிக்கொண்டு ராகேஷ் ஹாஸ்பிடல் போய்ச் சேர்ந்தபோது, அதிர்ந்தார்கள்.

"மோசம் போயிட்டோம்மா!"

"என்ன சொல்றீங்க? எந்த வார்டு? எங்கே இருக்காருன்னு கேட்டீங்களா?"

"இப்போ கேட்டுட்டுத்தானே வர்றேன். நான் இங்கே இருந்து உன்னைக் கூப்பிட்டுக் கொண்டு வருவதற்குள், ஜெய்யின் அப்பா விஷயம் தெரிந்து வந்து..."

"விஷயம் தெரிந்து வந்து..."

"ஜெய்யை வேறு ஹாஸ்பிடலுக்கு மாற்றி விட்டார்களாம்!"

"எந்த ஹாஸ்பிடல்... என்ன ஏதென்று தெரிந்து கொண்டு வாருங்களேன்... உடனே போவோம்."

பரிதவித்தாள் ஆதிரை. நெஞ்சு படபடவென்ற வெளியே தெறித்து விடுவதைப் போல, அடித்துக் கொண்டது.

பொங்கும் வியர்வையைத் துடைக்கவும் தோன்ற வில்லை.

ராகேஷ் வருவதற்குள் கீழே விழுந்து விடாமல் இருக்க... பிரயத்தனப்பட்டுப் பக்கத்திலிருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டாள் ஆதிரை.



மனம் ஒரு நிலையில் இல்லாமல் தறிகெட்டு ஓடியது.

தன் அம்மா, தம்பி, மாமனார், மாமியார் என இது வரை கவலைப்பட்டுக் கொண்டிருந்த அத்தனையும் ஒரு நொடியில் மறைந்து போக, மனமெங்கும்... 'ஜெய்... ஜெய்...' என்று அரற்றியது.

ராகேஷ் விசாரித்துக் கொண்டு வந்ததும், இருவரும் திரும்ப பைக்கில் புறப்பட்டனர்.

ஏதும் கேட்கக்கூடத் தோன்றாமல், பைக்கில் அமர்ந்திருந்தாள்.

அவர்கள் சென்ற தாமரை மருத்துவ மனையிலும் கைவிரித்து விட... சோர்ந்து போனாள் ஆதிரை.

"என்ன அண்ணே இது? எனக்கு அவர் அடிபட்டவுடன் தெரியாமல் போய் விட்டதே! அவர் பக்கத்திலேயே இருந்து அவரை எங்கும் அழைத்துப் போகாதவாறு செய்திருப்பேனே! இப்போது அவர் முகத்தைக் கூடப் பார்க்க முடிய வில்லை. எப்படி இருக்கிறார் என்றே தெரியவில்லையே!"

மூச்சிரைக்க ராகேஷை ஏறிட்டாள், ஆதிரை.

"இன்னொரு முறை எனக்காகப் போய் விசாரித்துப் பாருங்களேன்!"

"இப்போ இரண்டு பேரும் போய்த் தானேம்மா கேட்டோம். இங்கேயும் வசதி போதவில்லையென, உடனடியாகப் பெங்களூர் கொண்டு சென்று விட்டார்களாம். மனதைத் தேற்றிக் கொள். வேறு ஏதாவது வழி யோசிப்போம்."

அண்ணே... அண்ணே... என்று வாயார அழைக்கும் ஆதிரையை இப்படி வேண்டுமென்றே அலைக்கழிப்பது மனதிற்கு மகா உறுத்தலாக இருந்தது.

நாய் வேஷம் போட்டாகி விட்டது. ஒழுங்காகக் குரைக்க வேண்டுமே!

நல்ல வேளையாக... தலையில் அடிபட்டுச் சுய நினைவின்றி இருப்பவன், எப்படிப் பயணம் செய்ய முடியும்? மருத்துவர்கள் ஒப்புக் கொள்வார்களா? - என்றெல்லாம் யோசித்துக் கேள்வி கேட்கும் நிலையில் ஆதிரை இல்லை.

அவளது இப்போதைய நிலையில், எதைச் சொன்னாலும் நம்பினாள்.

சட்டென... தலையை உயர்த்தினாள்.

"எதற்கும்... அவருடைய அப்பாவின் செல்போனைத் தொடர்பு கொண்டு பேசுங்களேன். எங்கே போயிருக்கிறார்கள்? இப்போது அவர் எப்படி இருக்கிறார் என்று தெரிந்தால்கூடப் போதும். என் மனம் கொஞ்சமாவது சமாதானமடையும்."

"ச்சே... சிக்னலே கிடைக்கலே... இங்கேயே கொஞ்சம் இரும்மா!"

தள்ளிப் போய் நின்று கொண்டு பேசிவிட்டு வந்தான், ராகேஷ்.

"என்ன... இப்படி வேர்த்து வழியறீங்க? என்ன சொன்னார் ஜெய் அப்பா? அவருக்கு ஒன்றுமில்லை தானே!"



அடுக்கடுக்காய்க் கேள்விகளை அடுக்கினாள்.

"ஜெய்க்குப் பயப்படும்படி ஒன்றுமில்லை... ஒரு வாரம் பெங்களூர் ஹாஸ்பிடலில் தங்கிச் சிகிச்சை எடுத்துக் கொண்டாலே போதும்... ஆனால்..."

"ஆனால்..." - குரல் நடுங்கியது.

"ஆதிரை...! ஜெய்யின் அப்பா உங்களது கல்யாணம் பற்றித் தெரிந்து மிகவும் கோபத்தில் இருக்கிறார். என் மேலேயே மிகவும் கோபப்பட்டார். நாமும் உடனேயே பெங்களூர் புறப்பட்டுப் போவதில் சிக்கலொன்றுமில்லை. ஆனால், அவன் அப்பாவை எப்படிச் சமாளிப்பதென்றே தெரியவில்லை.

"ஹாஸ்பிடல் என்றும் பார்க்காமல், அவர் கத்தி, கூச்சல் போட்டு... அதனால் ஜெய்க்கு ஏதேனும் ஆகி விட்டால்...! ஜெய் இருக்கும் நிலையில் அதிர்ச்சி தரும் எதுவும் ஜெய் காதுகளில் விழக்கூடாது என்று டாக்டர்கள் சொல்லியிருக்கிறார்களாம்!"

தாலி கட்டிய புருஷன் சாகக் கிடக்கிறான்... அவன் முகத்தைப் பார்ப்பதில் கூட... மனைவி எனக்கு இத்தனை சிக்கலா?

முகம் மூடி விம்மும் ஆதிரையைப் பார்க்க, மனசு கனத்தது ராகேஷிற்கு.

ஒரு கணம்... எல்லாவற்றையும் சொல்லி விடலாமா என்று யோசித்து விட்டு, உடனேயே முடிவை மாற்றிக் கொண்டான்.

இதே ஆதிரை... இப்போது போய் நடந்தவற்றைக் கூறினால்... என்னைப் பார்த்துத் தீயாக விழித்து... புழுவைப் போல் நோக்க மாட்டாளா என்ன?

## 26

இன்று ஒரு நாள் பொறுத்துக் கொள்ளுமாறும்... நண்பர்களுடன் தொடர்பு கொண்டு, ஜெய்யின் தந்தை கொஞ்ச மேனும் மனசு சமாதானமானதும்... தானே பெங்களூர் கூட்டிப் போவதாகவும் வாக்குறுதி கொடுத்ததும்... கொஞ்சம் சமாதானமானாள், ஆதிரை.

"கண்டிப்பா... நீங்க சொன்னபடி செய்யணும். உங்களைத்தான் மலை போல் நம்பியிருக்கேன்!"

"என்னை நம்புகிறாய் இல்லை... அப்புறம் என்ன? சரி... வாம்மா... உன்னை முதலில் கூட்டிப் போய் டிபன் வாங்கித் தருகிறேன். ஜெய்யைப் பார்க்கப் போகும்போது நீ கொஞ்சமாவது தெளிவாக இருக்க வேண்டாமா?"

அவளைச் சாப்பிட வைத்து, அடுத்து என்ன செய்வது என்று விழித்தவளுக்குச் சமாதானம் கூறி, ஹோட்டல் அறையைக் காலி செய்து...

அவள் வீட்டிற்கு அழைத்துப் போனான் ராகேஷ்.

ராகேஷ் சொல்வதும் சரியென்று பட்டது, அவளுக்கு.

தானும், ஜெய்யுமாகப் போய், அவன் அப்பா, அம்மா கால்களில் விழுந்து ஆசிர்வாதம் வாங்குவதாக இருந்தது.



இப்போது, தான் எப்படி... எல்லாம் தெரிந்து விட்ட நிலையில்...? அவர் அப்பா தன் மேல் இருக்கும் கோபத்தில், ஜெய்யைப் பார்க்கக் கூடாதென்று கூறிவிட்டால்...

ஜெய் அருகே போய்... அவனைப் பார்க்காமல் எப்படி இருப்பாள்?

ஒரு நாள்தானே! நாளை அழைத்துப் போவதாகச் சொல்லியிருக்கிறாரே!

பேதைப் பெண்... தனக்குள் பலவாறு எண்ணங்கள் அலை மோத... தன் வீடு வந்தாள்.

காலையில் இருந்து ஜெய்யைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தவளுக்கு, இப்போது அம்மாவை எப்படி எதிர் கொள்ளப் போகிறோம் என்ற கவலை வந்தது.

யோசிக்கும் திறனின்றி, மரத்துப் போயிருந்தது மூளை.

எது வந்தாலும் எதிர் கொள்ள வேண்டியதுதான். அன்று ஒரே நாளில் ரொம்பவும் ஓய்ந்து விட்டிருந்தாள்.

முகேஷ்... இவள் படியேறும் நேரம்... வீட்டைச் சாத்தித் தாழிட்டுக் கொண்டிருந்தான்.

இவளைக் கண்டதும் தீயென விழித்தான்.

"இப்போ உனக்குச் சந்தோஷம்தானே!"

அவளைத் தாண்டி அவன் பார்வை ராகேஷைத் தொட்டு மீண்டது.

'உன் அதிசயப் புருஷன் இவன்தானா?' என்றது, அவன் பார்வை.

"அண்ணே! நீங்களாவது கொஞ்சம் சொல்லுங் கண்ணே!"

பரிதாபமாய் வெளிப்பட்டது அவள் குரல்.

அண்ணனா...? விழித்த முகேஷை... "முகேஷ்... இப்படி வாங்க!" - தோளில் கை போட்டவாறு, தனியே அழைத்துப் போனான், ராகேஷ்.

தனது சகோதரியைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு ராகேஷைத் தொடர்ந்தான்.

இவள் திருட்டுக் கல்யாணம் செய்து கொண்டு வீட்டை விட்டு ஓடியதால் அல்லவா... இன்று அம்மாவின் நிலைமை இப்படி...

திரும்ப மாலையும் கழுத்துமாக வந்து நிற்பாள் என்று எதிர்பார்த்தால்... இதென்ன கழுத்தில் மட்டும் தாலி! கூட... புருஷனைக் காணோம். அண்ணனாம்... ஒரு புது உறவு.

குழப்பம் மேலிட ராகேஷை ஏறிட்டான் முகேஷ்.

ராகேஷ்... ஒன்று விடாமல் சொல்லி முடித்தான்.

"ஏற்கெனவே உங்க சிஸ்டர் ரொம்ப நொந்து போயிருக்காங்க. இன்று ஒரு நாள் மட்டுமே அவங்க அலையாத அலைச்சல் இல்லை. நீங்க எப்படியாவது உங்க அம்மாவைச் சமாதானப்படுத்துங்க...

"ஜெய்யைப் போல... ஒரு மாப்பிள்ளை உங்களுக்குத் தேடினாலும் கிடைக்காது. உங்க சிஸ்டரை உள்ளே கூட்டிட்டுப் போங்க. எதுன்னாலும் உள்ளே போய்ப் பேசிக் கலாம். நான் எப்படியும் நாளை ஜெய்யின் பெங்களூர்



விலாசம் வாங்க முயற்சி பண்ணுகிறேன். நானே கூட அவங்களைக் கூட்டிட்டுப் போகிறேன்...

"உங்க மதர் எங்கே? நானே அவங்க கிட்ட... அவங்க திட்டினாலும் பரவாயில்லை..."

மௌனமாய் ஏறிட்டான் முகேஷ். "அம்மா.. பேசக் கூட..."

"அவ்வளவு கோபமாகவா இருக்காங்க. நானே பேசறேன். ஜெய்யும் ஆஸ்பத்திரியில் இருக்கும் நிலையில்... நீங்களும் உங்க சிஸ்டரை ஆதரிக்காவிட்டால்..."

இடைமறித்தான் முகேஷ். "அம்மா! பேச்சு மூச்சில்லாம ஹாஸ்பிடல்ல இருக்காங்க..."

சட்டென இரண்டே எட்டில் தம்பியை நெருங்கி... அவன் தோள்களைப் பிடித்து உலுக்கினாள்.

"டேய்... முகேஷ்! அம்மாவுக்கு என்னடா ஆச்சு?"

## 27

சட்டென விலகி நின்று.... தோளில் இருந்து அக்காவின் கைகளைத் தட்டி விட்டான்.

"ஆமா... இப்பக் கேளு. நீ இப்படி ஓடிப் போனதில... மனசொடிஞ்சு போன வங்கதான்... என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லியிருந்தா... ஊரறிய நானே கல்யாணம் பண்ணி வைத்திருப்பேனே... ஒரு கல்யாணம் தனக்குப் பண்ணக்கூட வக்கில்லாதவள்னு என்னை நினைச்சுட்டா பாருன்னு ஒரே புலம்பல்!"

"இப்போ... அம்மாவுக்கு என்ன ஆச்சு? சொல்லு..."

"சொல்றேன். சரி... எல்லா அம்மாவையும் போல நீ ஏமாத்திட்டுப் போனது தாங்க முடியாம வழக்கம் போல புலம்பறாங்கன்னு நினைச்சு... நேத்து நான் வெளியே புறப்பட்டுப் போனேன். அந்தச் சமயத்துல அம்மா தூக்க மாத்திரை சாப்பிட்டு..."

மேற்கொண்டு அவனால் விவரிக்க முடியவில்லை.

மெல்ல அவன் தோள்களைத் தட்டி ஆறுதல்படுத்திய ராகேஷ்...

"சமயத்தில நீங்க காப்பாத்திட்டீங்கள்ள..."

"ஏதோ என் நல்ல நேரம்... மழை வருகிற மாதிரி இருக்கே... என்று ரெயின் கோட் எடுக்க... நான் திரும்பி வந்தால்... உடனே ஆட்டோவில போட்டு... ஹாஸ்பிடல்ல கொண்டு போய்... நான் மட்டும் வராமப் போயிருந்தா...

"இதோ நிக்கிறாளே... இவளால என் அம்மாவையே பறி கொடுத்திருப்பேன். தெரு ஜனங்க மத்தியில தலை குனிஞ்சு எவ்வளவு வேதனைப்பட்டிருந்தா... அம்மா அந்த முடிவுக்குப் போயிருப்பாங்க... எல்லாம் இவளால..."

ஆதிரை மேல் திரும்பவும் பாயப் போனவனைத் தடுத்து நிறுத்தினான் ராகேஷ்.

"முகேஷ்! ஆதிரை எனக்கு சிஸ்டர் மாதிரி. தெரிந்தோ தெரியாமலோ நம்மை மீறி நிறைய நடந்து விட்டது. இப்போ இவங்களுக்கு நீங்க... ஆறுதல் சொல்றீங்களோ இல்லையோ... நீங்களும் வேதனைப் படுத்திக் குத்திக் கிழிக்காம இருக்கணும்..."



"உங்களுக்கு உண்மையிலேயே இப்படி ஒரு சிஸ்டர் இருந்து... 'என்ன... அக்கா எவன் கூடவோ போயிட்டாளா'ன்னு முதுகுக்குப் பின்னாடி நாலு பேர் பேசும்போது... அந்த வலி உங்களுக்குத் தெரியும்... நீங்க பேசாதீங்க... சார்!"

"இல்லப்பா... இப்ப ஆஸ்பத்திரியில உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறவங்க... ஆதிரைக்கும் அம்மா தான். ஆயிரம் தான் ஆனாலும் அம்மா இல்லையென்றாகி விடுமா! வாங்க... முதல்ல மூன்று பேரும் ஹாஸ்பிடல் போவோம்."

என்ன நினைத்தானோ முகேஷ் ஒன்றும் பேசாமல் வந்தான்.

ராகேஷும் ஆதிரையும் ஆட்டோவில் பின்தொடர... மூவரும் சென்றனர். ஆனால் இவர்கள் போய்ச் சேர்வதற்குள் எல்லாம் முடிந்து விட்டிருந்தது.

முகேஷ்... வீட்டிற்கு வந்திருந்த நேரத்தில் பல்ஸ் குறைந்து சிகிச்சை பலனின்றிக் கண் மூடியிருந்தாள் அம்மா.

கத்தி ஆர்ப்பாட்டம் செய்து... ஆதிரையைக் குதறுவான் என்று எதிர்பார்த்த முகேஷ்... எதுவும் பேசத் தோன்றாமல் பிரமை பிடித்து உட்கார்ந்து விட்டான்.

ஆதிரைக்குள்ளோ குற்ற உணர்ச்சி முள்ளாய்க் குத்தியது.

போன வாரம் இந்த நேரம் கூட... என்ன அழகாய்ச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தவள்...

இன்று படுக்கையில் பிணமாக்கி விட்டேனே! இறுதி மூச்சுவரை வைராக்கியமாய் என் முகம் பார்க்காமலேயே போய் விட்டாளே...!

ஜெய்யின் நல்ல குணத்தைப் புரிந்து கொள்வாள்... தங்களை வீட்டோடு ஏற்றுக் கொள்வாள் என்று எத்தனை எதிர்பார்ப்புகளுடன் வந்தேன்.

ஜெய்யின் முகத்தைக் கூடப் பார்க்காமல் போய் விட்டாளே...!

இவை அனைத்தையும்... கூட இருந்து பார்த்துக் கொண்டிருந்த ராகேஷுக்குத் துக்கம் நெருஞ்சி முள்ளாய் நெஞ்சைக் குத்தியது.

பாவம்! இந்தப் பெண்...

அடுக்கடுக்காய் எத்தனை சோதனைகள்!

## 28

**தா**யைக் கரை சேர்த்து விட்டு... இப்போது வீட்டில் ஆதிரை... முகேஷ் இருவருமே...!

"உன் மேல்... எனக்குக் கோபம் உள்ளபோதும்... இப்போது நீயிருக்கும் நிலையில் என்னால் உன் மேல் கோபத்தைக் காட்ட முடியவில்லை.

இப்போது என்ன செய்யப் போகிறாய். சொல்!"

தம்பி கேட்கவும்தான்... சுய நினைவுக்கு வந்தவள் போலானாள் ஆதிரை.



கடந்த இரு தினங்களாக... நடந்தவை அனைத்தும் அவளை மீறி நடந்து கொண்டிருந்தன.

சொல்லப் போனால்... சுயமாக எதைப் பற்றியும் யோசிக்கும் திறன்கூட அற்றுப் போயிருந்தாள் என்றுதான் கூற வேண்டும்.

ஜெய்யைப் பற்றி நினைத்ததும் கனமான ஒரு பெருமூச்சு அவளுள் எழுந்தது.

எப்படியாவது பெங்களூர் விலாசம் வாங்கி... தன்னைக் கூட்டிப் போவதாக ராகேஷ் கூறியிருந்தார்.

இன்று எப்படியும்... வந்து நல்ல செய்தி கூறுகிறேன். முடிந்தால் ஜெய்யின் கைபேசி எண்ணாவது வாங்கித் தருகிறேன். ஃபோனில் பேசு... என்று கூறிச் சென்றவர்தான்!

ராகேஷ்... வரும்போது கூடவே ஏமாற்றமும் அல்லவா வந்தது.

'பெங்களூரில் வசதி வாய்ப்புகள் குறைவென்றும்... தலையில் ஒரு சின்ன ஆபரேஷன் செய்ய வேண்டியிருப்பதால் வெளிநாட்டிற்குப் போய்விட்டான்...' என்றும் கேள்விப்பட்டதுதான் தாமதம்...

இடி விழுந்தவள் போலானாள், ஆதிரை.

நடுவில் ஏதேதோ நடந்து விட்டது. அம்மா நன்றாக இருந்திருந்தால் இவள் பெங்களூர் கிளம்பிப் போயிருப்பாள்.

ஜெய் முகத்தையாவது பார்த்திருப்பாள். கூடவே தானும் இருந்து பணிவிடை செய்திருப்பாள்.

ஜெய் கையால் தாலி வாங்கி... அவன் மனைவி என்றான பின்னும், தனக்குக் கூடத் தெரியப்படுத்தாமல்...

ஜெய் சிகிச்சைக்கு வெளிநாடு சென்றது மனதை ரொம்பவே உறுத்தியது.

ஆனால் நிலவியிருந்த உண்மை அவளைச் சுடாமல் இல்லை.

இதென்ன ஜெய்யின் பெற்றோர், இவள் அம்மா... எல்லாம் சம்மதித்து... சத்திரத்தில் எல்லோர் ஆசிர்வாதத்துடனா நடந்தது... இவர்கள் திருமணம்!

இவள் எந்த முகத்துடன் உரிமை கொண்டாடுவாள்?

ராகேஷ் கூறியபடி... ஜெய் வெளிநாட்டிலிருந்து வந்ததும்.. அவர்கள் வீட்டுக்குச் செல்லலாம் என்று முடிவு செய்தனர் மூவரும்.

ராகேஷும் போய்விட... தனிமையில் ஆதிரையும் முகேஷும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளாவிட்டாலும்... ஒரு கனமான அமைதி இருவர் நிம்மதியையும் தொலைத்திருந்தது.

தனது படிப்பு முடிய... இன்னும் ஓரிரு மாதங்களே இருந்தபடியால், முகேஷ் பார்ட் டைம் வேலை தேடிக் கொண்டான்.

ஆதிரையைத் திரும்ப எங்கும் வேலைக்குச் செல்ல அவனும் வற்புறுத்தவில்லை.

அவளும் சமூகத்தில் யாரையும் தலை நிமிர்ந்து சந்திக்கும் திராணியற்று இருந்தாள்.

ஒரு வாரம் கழிந்த நிலையில் ஆதிரைக்கு முகேஷை அழைத்துக் கொண்டு ஜெய் வீட்டுக்குப் போய்ப் பார்த்து விட்டு வரலாமா... என்றுகூட யோசனை தோன்றியது.



ஆனால்... போய் யாரைப் பார்க்க? ஜெய்யும் கூடவே அவன் அம்மாவும் வெளிநாட்டிலிருந்து இன்னமும் திரும்பவில்லை என்றுதான் ராகேஷ் கூறினாரே...

அளவுக்கதிகமாக ஒருவரை நம்பும்போது சிந்திக்கும் திறன் குறைந்து... இதயத்தின் ஆதிக்கம் அதிகமாவது வழக்கம்.

அப்படிக் கண்மூடித்தனமாக ராகேஷை நம்பியிருந்தாள்.

ஜெய் வரும் நாள்... ராகேஷ் கூறுவார். அன்று முதல் ஆளாகப் போய் நிற்க வேண்டும்.

சுயநினைவோடு... என் ஜெய் பேச ஆரம்பித்தால் போதும்... எப்படியும் அப்பா, அம்மாவைச் சமாதானப்படுத்தி விடுவார். என்னை வீட்டிற்குள் அழைத்துக் கொள்வார், அவர் மனைவியாக!

அவள் அதுவரை பொறுமையாகக் காத்திருக்கத் தயாராக இருந்த போதிலும், காலம் அதுவரை அவளைக் காத்திருக்க விடவில்லை.

அன்று காலை எழுந்தது முதலே களைப்பாக உணர்ந்தவள்... சமையல் ஏதும் கூடச் செய்யாமல் முகேஷை வெளியில் சாப்பிட்டுக் கொள்ளச் சொல்லி விட்டாள்.

முகேஷ் இப்படி நகர்ந்ததுதான் தாமதம்... குடம் குடமாய் வாந்தி எடுத்தவள்... வயிறு கலங்கித்தான் போனாள்.

வாந்தி, தலை சுற்றலின் காரணம்கூட அறிய முடியாத அளவு... அவள் ஒன்றும் சின்னப் பாப்பா அல்லவே!

அவளது யூகத்தை டாக்டரும் உறுதி செய்துவிட நிலை குலைந்து போனாள்.

திருமணம் முடிந்து கிட்டத்தட்ட ஒன்றரை மாதங்கள் ஆகிவிட்டன. ஜெய்யைப் பார்க்கவோ அவனோடு பேசவோ செய்த முயற்சிகள் எல்லாம் கிணற்றில் இட்ட கல்லாயின.

நடுவில் ஒரு நாள்... ராகேஷையும் இதுபற்றிக் கேட்டுப் பார்த்தாள்.

அன்றே தலையில் ஆபரேஷன் செய்ததாகக் கூறினாரே... இன்னுமா சுயநினைவின்றி இருப்பார் ஜெய்... அவருக்குச் சுயநினைவு திரும்பினால்... முதலில் என்னைப் பற்றியல்லவா விசாரிப்பார்.

பேதைப் பெண்... பலவாறாக யோசித்தவாறு ராகேஷ் வந்ததும்... தன் நிலையைக் கூறி... எப்படியாவது ஜெய் வீட்டுக்குப் போய் அவருடைய அப்பாவைப் பார்த்துப் பேச வேண்டும் என்று முடிவு செய்தாள் ஆதிரை.

அவள் என்ன முடிவு எடுத்தாலும் சரி... என்ன செய்தாலும் அதை வெறுமனே பார்த்துக் கொண்டு... வேளைக்கு உண்டு விட்டு... உறங்கி விட்டு... அவன் பாட்டி வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தான் முகேஷ்.

'ஆசைத் தம்பி... அப்படி வேற்று முகம் காட்டும் அளவுக்குத் தன் செயல் அவனை எவ்வளவு காயப் படுத்தியிருக்கிறது!' என்று எண்ணி மறுகினாள்.

வெளிப்படையாகச் சொல்லா விட்டாலும்... அம்மாவின் மறைவுக்கு மறைமுகமாகத் தான்தான் காரணமென்று தம்பி நினைப்பது தெரிந்தது.



எப்படி இருக்க வேண்டிய அறிமுகம்...! தானும் ஜெய்யுமாக... ஜெய் பெற்றோர் கால்களில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கி... அவர்கள் ஆசியோடு வாழ்க்கையைத் துவங்கி... அவர்கள் பேரனையோ பேத்தியையோ வயிற்றிலே சுமக்கிறேன் என்று ஆசையோடு அவர்களுக்குத் தெரியப் படுத்த வேண்டியவள் நான்.

இன்றோ... உங்கள் குடும்ப வாரிசைச் சுமக்கிறேன்... அதை உங்கள் பிள்ளைக்குத் தெரியப்படுத்தவாவது அவர் இருப்பிடம், ஃபோன் நம்பர் சொல்லுங்கள்...' என்று இறைஞ்சும் நிலையில் இருக்கிறேனே...

சொல்லவொண்ணாத் துயரத்தோடு சாய்ந்திருந் தவளை... மேலும் நிலைகுலையச் செய்ய... செய்தியோடு வந்தான் ராகேஷ்.

இப்போதைக்கு ஜெய் திரும்பி வரும் எண்ணமே இல்லையென்றும், தலையில் அடிபட்டதில் முந்தைய சம்பவங்கள் எதுவுமே நினைவின்றி... அம்மா, அப்பாவையே யார் என்று கேட்கிறான்... என்றதும் துடித்துப் போனாள், ஆதிரை.

அவனது வீட்டுக்குச் சென்றும்கூட... உள்ளேயே அனுமதிக்கப்படாமல் துரத்தப்பட்டாள்.

பின் ஒரு நாள்... இவளது தோற்றத்தையும், இவள் அலைவதையும் பார்த்துவிட்டு... வாட்ச்மேன் பரிதாபப்பட்டு... 'சின்ன ஐயாவுக்குப் பழசெல்லாம் மறக்கவுமில்லை... ஒன்றுமில்லை. உங்களை உள்ளே சேர்க்கக் கூடாதென்று அப்படிச் சொல்லியிருக்காங்க...' என்று சொன்னவன்

மீதியை முடிப்பதற்குள்... அவசரமாக அழைக்கப்பட்டு உள்ளே சென்று விட்டான்.

பின்... அதே வாட்ச்மேன் மூலமாகவே... ஜெய் வெளிநாட்டிலேயே வசதியான ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு விட்டதாக அறிந்தாள்.

ஆண்களை விடப் பெண்களுக்குப் பாசம் மட்டுமல்ல... வைராக்கியமும் ஜாஸ்தி.

தன்னை விட்டுவிட்டுப் போனவனைத் தான் தேடிப் போய்க் கெஞ்சியாவது சேர்ந்து வாழ்வதா... என்று தன் குழந்தையைத் தனி ஆளாகவே தாயுமாக, தந்தையுமாக தானாகவே இருந்து ஆளாக்கியிருக்கிறாள்.

## 29

இன்று ஜெய்யின் நினைவஞ்சலியில் ஃபோட்டோவில் சிரிக்கப் பார்த்து... இதென்ன புதுக் குழப்பம் என்று தளர்ந்து உட்கார்ந்தவளுக்கு மெல்ல மெல்லப் புரிய ஆரம்பித்தது.

தலையில் அடிபட்டு அன்றே இறந்தவனை எப்படி பைத்தியம் போலத் தேடி அலைந்திருக்கிறாள்.

அவள் பையன் ஜனித்த சில தினங்களிலேயே இறந்தவனை...

அவன் வருவான்... தன் பிள்ளையைப் பார்ப்பான் என்று எப்படி எதிர்பார்த்துக் கொண்டிருந்திருக்கிறாள்!



மெல்ல மெல்ல அவளுக்கும் புரிய ஆரம்பித்தது. இருபது இருபத்தொரு வருடங்களுக்கு முன்னால் யோசிக்காதவள்... இப்போது தனிமையில் யோசித்தாள்.

நல்லவேளையாக அப்பாவைப் பற்றிய வருத்தத்தில் அம்மா இருக்கிறாள்... தொந்தரவு பண்ண வேண்டாம் என்று மனோ அவளைத் தனியே விட்டு விட்டான். அவளுக்கும் யோசிக்க முடிந்தது.

அன்று ராகேஷ் சொன்னதை அப்படியே நம்பினாள். வாட்ச்மேன் சொன்னதை அப்படியே நம்பினாளே தவிர... அதைத் தாண்டி யோசிக்கக் கூட இல்லையே...!

எது எப்படியாகிலும்... ராகேஷுக்கு இந்த விஷயம் தெரியாமலிருக்க வாய்ப்பில்லை.

எப்படிப் பூனை மாதிரி எல்லாவற்றையும் தெரிந்து கொண்டே... என்னையும் அலைக்கழித்து... ஒன்றா... இரண்டா... எவ்வளவு பொய் சொல்லி...

ஒரு முடிவோடு உடனே ராகேஷை ஃபோனில் அழைத்தாள் ஆதிரை. ஒரு வகையில் ஆதிரையிடமிருந்து ஃபோனை ராகேஷ் எதிர்பார்த்திருந்தான் என்றுதான் கூற வேண்டும்.

ஏற்கெனவே... தான் மனசறிந்து ஆதிரையை ஏமாற்றியதால்... மன உளைச்சலில் இருந்தவனை... திரும்பவும் ஜெய்யின் தந்தை கூப்பிட்டதும்... ஒன்றும் புரியவில்லை அவனுக்கு.

ஆனால் அவர் கூறக் கூற... ஏற்கெனவே அவர் பேச்சைக் கேட்டு... செய்தவற்றிற்குப் பரிகாரமாகவாவது அவர் கூறியபடி செய்ய வேண்டுமெனத் தோன்றியது.

ஜெய்யின் பிள்ளையைப் பார்க்கும்போதெல்லாம் உண்மையைச் சொல்லிவிட வாய் துடிக்கும். ஆனால் ஏதோவொன்று மனதில் தோன்றித் தடுத்து விடும்.

இப்போது அதற்குப் பிராயச்சித்தம் செய்ய ஒரு சந்தர்ப்பம் வந்ததென்று நினைத்தான்.

மறுமுனையில் ராகேஷ் கிடைத்ததும்... அவனைப் பேசக்கூட விடாது கொட்டி விட்டாள் ஆதிரை.

"சிஸ்டர்! ஒரு நிமிஷம்... ஒரே நிமிஷம். நான் கூறுவதைக் கொஞ்சம் கேட்கிறீங்களா?"

"சொல்லுங்க!" - சற்றே நிதானித்து அவனையும் கொஞ்சம் பேச விட்டாள்.

'இப்போ அவனுடைய ஃபோட்டோவைப் பேப்பரில் பார்த்து... உங்களுக்கு எவ்வளவு அதிர்ச்சியாக இருக் கிறதோ... அதே அளவு அதிர்ச்சிதான் நேற்று எனக்கும் ஏற்பட்டது.

"உடனேயே ஜெய்யின் தந்தையைப் போய்ப் பார்த்து... இது விஷயமாகக் கேட்க வேண்டும் என்ற ஆவேசம் எனக்கு வந்தது. ஆனால் இதில் நீங்களும் சம்பந்தப்பட்டிருக்கீங்க... நீங்களும் ஏமாற்றப்பட்டிருக்கீங்க... என்பதால் நானே ஃபோன் பண்ணணும்னு இருந்தேன். இரண்டு பேருமே போய் ஜெய்யின் தந்தையைப் பார்க்கலாம். நான் உங்கள் வீட்டுக்கு வருகிறேன்."

ராஜதுரை சொன்னபடியே பேசியவன் அலுவலகத்தில் அரை நாள் விடுப்புச் சொல்லி விட்டு வெளியே வந்தான்.



ராகேஷ் சொல்லச் சொல்ல ஆதிரைக்கு மனம் கனத்துப் போனது.

அடிக்கடி தவறான முடிவெடுத்துத் தவிக்கிறாள்.

பாவம் ராகேஷ்... என்னிடம் பொய் சொல்லப் பட்டதைப் போல... அவனும் ஏமாற்றப்பட்டிருக்கிறான். இப்போதுதான் விஷயம் தெரிந்து என்னைப் போலவே ராகேஷும் அதிர்ச்சி அடைந்திருக்கிறான். இது புரியாமல்... முதலில் ஏதேதோ பேசி விட்டேன்.

ஆட்டோவில் அருகருகே சென்றாலும் ராகேஷும் ஆதிரையும் ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை.

அதற்கான எண்ணமே தோன்றாமல்... இருவர் மனமும் வெவ்வேறு வகையில் கொந்தளித்துக் கொண் டிருந்தது.

ஜெய்யின் வீட்டிற்குள் காலடி எடுத்து வைக்கும் போதே... ஆதிரையின் கால்கள் தள்ளாடின. நா வறண்டது. வாயிற் கதவை இறுகப் பிடித்துக் கொண்டாள்.

இருபத்தொரு வருடங்கள் முன்பு எப்படி வந்திருக்க வேண்டியவள்... இன்று எப்படி வருகிறாள்?

ஜெய் அருகே... ஜெய் மனைவியாய்... மருமகளாய் அடியெடுத்து வைத்திருக்க வேண்டியவள்!

இன்று விதவை மருமகளாய்... கணவனை இழந்தவளாய்...

மனம் ஓலமிட்டது.

திரும்பிய பக்கமெல்லாம் பல்வேறு இடங்களில் ஜெய் தோன்றிப் பேசினான்.

'நீ எப்படியும் வருவாய் என்று தெரியும்... லயா!' என்றான்.

'உன்னை எப்படி ஏமாற்றி விட்டேன் பார்... லயா!' - சிரித்தான்.

'என்றோ உலகத்தை விட்டே போய்விட்ட என்னை... உன்னை விட்டு வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு விட்டேன் என்று கோபித்தாயே... நியாயமா, லயா?' – கைகொட்டிச் சிரித்தான்.

'என் அப்பாதான் உன்னிடம் பொய் சொல்லி விட்டார். நீ கூட எப்படி நம்பினாய்... லயா!' – வேதனைப்பட்டான்.

ராகேஷ் உள்ளே போய்விட... மௌனமாகப் பின் தொடர்ந்தாள்.

வீட்டின் பிரம்மாண்டம் பயமுறுத்தினாலும், அதன் வெறுமை மனதை ஏதோ செய்தது.

ராகேஷ்... ஏதோ சண்டை போட்டவாறு கேட்டுக் கொண்டு வர... அவனைச் சமாதானப்படுத்திக் கொண்டே வந்தவரை ஏறிட்டாள், ஆதிரை.

இன்றுதான் முதன்முறையாக மாமனாரை நேரில் பார்க்கிறாள். இவருடைய பேரப் பிள்ளையைப் பெற்றெடுத்து அவனுக்கே இருபது வயதாகும்போதுதான்... இவள் தன் மாமனாரையே முதன் முதலாகச் சந்திக்கிறாள்.

அவளுக்கே அவர்கள் சந்திப்பு விந்தையாகப் பட்டது.



அவரைக் கண்கள் இடுங்க... நேர்பார்வை பார்த்தாள்.

கம்பீரத் தோற்றம். பணக்காரக் களை. பார்ப்பவரைக் கையெடுத்துக் கும்பிட வைக்கும்... ராஜ களை!

ஆனால் இவர் செய்த காரியம் அவளைக் கை யெடுத்துக் கும்பிடும்படியாகவா செய்திருக்கிறது?

அவளை அறியாமல் ஒரு அருவருப்பு எண்ணம் அவள் முகத்திலே வட்டமிட்டது.

"வாம்மா!" அவளைத் தாண்டி அவர் கண்கள் தேடின. "எங்கேம்மா... என் பேரப் பிள்ளை..."

என்னவோ... எதுவுமே நடவாதது போல... வெளியூரில் இருந்து வந்திருக்கும் மருமகளையும் பேரனையும் வரவேற்பது போல எவ்வளவு இலகுவாக எப்படி இவரால் பேச முடிகிறது!

"என் பிள்ளை வரவில்லை. வரமாட்டான். ஆமாம்... எங்கே உங்கள் பிள்ளை?"

ஒரு நிமிடம் மௌனமாகக் கண்களை மூடியவர்... இனிமேலும் மறைக்க ஏதுமில்லை என்பது போல் தணிந்த குரலில், "அம்மா... ஆதிரை! ஆங்... அதுதானே உன் பெயர். ஆதிரை... முதலில் என்னை மன்னித்து விடம்மா. என் வயதிற்கு உன் இடத்திற்கு இறங்கி வந்து மன்னிப்புக் கேட்கவும் தயங்கவில்லை. மன்னித்து விடம்மா!" என்றார்.

"ஏன் மாமா! இப்படி ஒரு பொய்... என்னிடம்?"

"ஜெய்க்கு ஆக்ஸிடெண்ட் நடந்த அன்றுதான் நான் வெளிநாட்டிலிருந்து காலை வந்தேன். வந்ததுமே... அவன் அம்மா மூலம் கேள்விப்பட்டேன். எல்லாம்..."

அந்த நாளைக்கே சென்று விட்டவர் போலச் சற்று நிறுத்தினார்.

"இதைச் சொல்வதற்கு இப்பொழுது வேதனை தான் படுகிறேன். அன்று நீங்கள் இருவரும் கணவன், மனைவியாய் வந்து ஆசிர்வாதம் வாங்கினாலும்... ஏற்றுக் கொள்வதைப் போல ஏற்றுக் கொண்டு... பின் எப்படியாவது ஜெய்யை உன்னிடமிருந்து பிரித்து... நான் ஆசைப்பட்ட மாதிரி...வேறு பணக்கார இடத்தில் கல்யாணம் செய்யலாம் என்று தீர்மானித்திருந்தேன்.

"அப்போதுதான் ஜெய்யின் ஆக்ஸிடெண்ட் செய்தி வந்தது. உனக்குத் தெரிவிக்க வகையின்றி... முதலில் எனக்குச் செய்தி தெரிவிக்கப்பட்டவுடன்... கடவுளாகவே எனக்கு உதவ... உன்னிடமிருந்து அவனைப் பிரித்து என்னிடம் அனுப்பி விட்டார் என்று சந்தோஷப்பட்டேன்.

"ஜெய் குணமானதும் அவனைப் பேச வேண்டிய விதத்தில் பேசி... உன்னிடமிருந்து விலக்கி விடலாம் என்றும் முழுவதுமாக நம்பினேன். ஆனால் சில மணி நேரத்திலேயே... ஜெய் என்னை ஏமாற்றி விட்டுப் போய் விட்டான்."

"அது சரி மாமா! நான் குடுத்து வைத்தது அவ்வளவு தான். அவரே இறந்து விட்டாரே... கடவுளாகவே என்னிடமிருந்து அவரைப் பிரித்து விட்டாரே! பின்... நீங்கள் அவர் இறந்ததைக் கூட என்னிடம் சொல்லாமல்... அதைவிட... அதையும் இதையும் கூறி... ஹாஸ்பிடல்... ஹாஸ்பிடலாக அலைய விட்டு... மாமா...!"

ராஜதுரையின் புருவங்கள் உயர்ந்தன.



## 30

"ஆமாம்... மாமா! பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் நீங்கள் என் மாமனார் தானே! ஏன் என் புருஷன் இறந்ததையே என்னிடம் மறைத்தீர்கள்?"

"திரும்பத் திரும்ப மன்னிப்புக் கேட்கச் சொல்கிறாய். கேட்கிறேன், அம்மா... ஏனெனில் இந்த இருபதாண்டுகளில் காலம் என்னை அந்தளவு பக்குவப்படுத்தி விட்டது. ஆனால்...

"அன்று... எனக்குள் இருந்த பணக்கார ரத்தம்... பணத்திமிர் என்றுகூட நீ நினைத்துக் கொள்ளலாம். என் அந்தஸ்திற்குக் கொஞ்சம் கூடச் சரிசமமே இல்லாதவள் நீ! உன்னை... இறப்பதற்கு முன் என் மகன் காதலித்தான் என்பதால் என் மருமகளாக ஏற்றுக் கொள்ள வேண்டுமா... என்று என் ஈகோ தடுத்ததால்... என் மகன் இறந்ததே தெரியக்கூடாது என்று நினைத்தேன்...

"தெரிந்தால்தானே... என் வீட்டுக்கு என் பையனின் பிணத்தருகில்... அவன் மனைவியாய் உரிமை கொண்டாடுவாய் என்றுதான்..."

அவருடைய தலை தாழ்ந்தது... தானாக!

ஆதிரை தலை உயர்ந்தது... தானாக!

"என்ன மாமா... அவரே போய் விட்டார். பின் இங்கே உரிமை கொண்டாட என்ன இருக்கிறது?"

"ஏன் இல்லை... ஏன் இல்லை... என் சொத்து இல்லை? என் ஆஸ்தி இல்லை? அவனுடைய இறப்பிற்கு

வந்தவர்கள் முன்னிலையில் அவனுடைய மனைவியாக... உன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டு... அவன் மனைவியாக... இந்த வீட்டின் மருமகளாக... சொத்தில் பங்கு..."

அவர் முடிக்கக் கூட இல்லை. அவரைப் புழுவை விட... கேவலமாக ஒரு பார்வை பார்த்தாள் ஆதிரை.

'என்னை இவ்வளவு கேவலமாகவா எடை போட்டிருந்தீர்கள்.. உங்கள் மகன் அவ்வளவு கேவலமாக பணத்தாசை பிடித்த ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்திருப்பான் என்றா நினைத்தீர்கள்!' – என்று சுட்டது அவள் பார்வை.

அவசர அவசரமாகச் சொன்னார், ராஜதுரை. "அன்று முட்டாள்தனமாக என் சொத்துக்கு ஆசைப்பட்டுத்தான் ஜெய்யை மணந்திருக்கிறாய்... என்று சந்தேகப்பட்டேன். அவன் செத்துப் பிணமாய் இருக்கும்போது கூட... என் குடும்ப மானம் போகக்கூடாது என்று நினைத்தேன்.

"ஆனால்... அவனும் போய்... அடுத்த ஒரு வருடத்திலேயே என் மனைவியும் போய்... இத்தனை சொத்து பத்துகள் இருந்தும்... அதனை ஆள ஒரு வாரிசின்றி... போனதும்தான் புத்தி வந்தது. நான் செய்த தவறு புரிந்தது. உன்னை மருமகளாக ஏற்றுக் கொண்டிருந்தாலாவது உனக்கு மறுமணம் செய்து வைத்தாவது உன் மூலம் எனக்குப் பேரனோ பேத்தியோ கிடைத்திருப்பார்கள் என்று நினைப்பேன்.

"அப்போதுதான் ஜெய்யின் குழந்தை உன்னிடத்தில் வளருவது கேள்விப்பட்டு எவ்வளவு சந்தோஷப்பட்டேன்... தெரியுமாம்மா!"



"ஆனால் அதிலும் துரதிர்ஷ்டம். நான் தேடி வருவதற்குள்.. நீ வேறு வீட்டிற்குப் போய் விட்டாய். உன் தம்பியும் திருமணமாகி வெளியூரில் செட்டில் ஆகி விட்டதையும் அவன் உன்னைத் தன்னுடன் வைத்துக் கொள்வதையே அவமானமாக நினைத்ததால்... நீ வேறு வீடு பார்த்துக் கொண்டு போய் விட்டதையும் அறிந்தேன்.

"கடந்த ஐந்தாண்டுகளாக... வருடந்தோறும் ஜெய்யின் நினைவஞ்சலி ஃபோட்டோவை வெளியிட்டு வந்தேன். என்னிடம் சண்டை போடவாவது என்னைத் தேடி வருவாய் என்ற என் நம்பிக்கை வீண் போகவில்லை."

"உங்கள் வீண் பிடிவாதத்தால்... வீண் கர்வத்தால்... நான் என் புருஷனைக் கடைசியில்... முகம் பார்த்து... அவர் காலடியில் அழக்கூடக் கொடுத்து வைக்காமல் போய் விட்டேனே... இப்போது நீங்க வருத்தப்பட்டு என்ன செய்ய?" – உடல் குலுங்க விம்மினாள் ஆதிரை.

"அதனால் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன்மா... என் பேரப் பிள்ளையை... நீ நாளையே... வேண்டாம். இன்று மாலையே அழைத்து வா! அவன் பெயர் என்ன?"

"மனோ. உங்கள் பேரப் பிள்ளையை நீங்கள் பார்ப்பதைத் தடுக்க நான் யார்? இப்படி ஒரு தாத்தாவைப் பார்த்தால்... அவனும் தான் சந்தோஷப்படுவான். ஆனால்..."

"ஆனால் என்னம்மா?"

"அவனுக்கு இது எதுவுமே தெரியாது. என்று என்னை விட்டு இன்னொரு பெண்ணை மணந்து கொண்டார் ஜெய் என்று நான் கேள்விப்பட்டேனோ... அன்றே என் மனதளவில்

அவர் செத்து விட்டார். எனவே, அவர் இந்த உலகிலேயே இல்லை என்று சொல்லித்தான் அவனை வளர்த்திருக்கேன். அதுவே... அவனைப் பொறுத்தவரையில் உண்மையாக இருக்கட்டும்."

எதுவும் சொல்லவில்லை ராஜதுரை.

"நீ... எனக்கு என் பேரனைக் கூட்டி வந்து காட்டும்மா... அது போதும். நீ வந்து எவ்வளவு நேர மாயிற்று. ஜூஸ் குடி. முருகா... சாப்பாடு ரெடி பண்ணு. என் மருமகளுக்கும் ராகேஷுக்கும்..."

"இல்லை மாமா! எப்போது உங்கள் பணத்திற் காகத்தான் உங்கள் மகனை மணந்தேன்... என்று நினைத் தீர்களோ... அப்புறம் இந்த வீட்டில் பச்சைத் தண்ணீர் கூடக் குடிக்க மாட்டேன்."

"என்னம்மா நீ! நான்தான் நடந்த எல்லாவற்றையும் கூறி... மன்னிப்புக் கூடக் கேட்டு விட்டேனே... என் மகள் மாதிரி... இப்போ நீ! நீயும் மனோவும் ஒரு நல்ல நாள் பார்த்து... இங்கேயே..."

"மறுபடியும் மன்னிக்கணும் மாமா! நான் இந்த வீட்டில் தண்ணீர் கூடக் குடிக்க மாட்டேன் என்று இப்போதுதான் கூறினேன். நீங்கள் என்னவென்றால் இங்கேயே வரச் சொல்லி...

"அப்புறம்... நீங்கள் என் மீது வைத்திருந்த கீழ்த் தரமான அபிப்பிராயத்தை உண்மையாக்கியது போலாகி விடும். உங்கள் பணத்திற்காக இப்போது... என் பையனுடன் இந்த வீட்டுக்கு வந்தது போலாகி விடும்.



"அப்படி நான் இங்கேயே வந்தால் உங்கள் மகனின் ஆத்மாகூட என்னை மன்னிக்காது... மாமா!

"நான் உங்கள் பேரனை அழைத்து வருகிறேன். அவன் வரட்டும்... போகட்டும். அதுதான் எங்கள் எல்லை. நம் எல்லை... என்று நினைக்கிறேன். வருகிறேன் மாமா! வாங்கண்ணே, போகலாம்!"

ராகேஷைப் பார்த்துக் கூறிவிட்டு... தலை நிமிர்ந்து செல்லும் மருமகளைப் பெருமிதமாகப் பார்த்தார், ராஜ துரை.